தென்மொழி

வீழ்ச்சிக்கு விரைந்தீர்!

—★—

அரியேற்றைச் சிறைபுகுத்தின் அதன்முழக்கம்
அடங்கிடுமோ? அண்ட மெல்லாம்
எரியேற்றும் பெரும்பிழம்பைச் சிறுநீர்தான்
அவித்திடுமோ? அறமில் சூழ்ச்சி
நரியேய்க்கும் சிறுமனத்திர்! நல்லுணர்வைப்
புன்சிறையால் தெற நினைத்திர்;
விரைவேற்ற லானீர்நும் வீழ்ச்சிக்கே;
தமிழகத்தின் விடுதலைக்கே!

—★—

—ம இலெ. த.

சிலை (மார்கழி)

தி. பி. ௧௯௯௬

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோள்எழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே !

சுவடி 3 | மார்கழி. தி. பி 1996 (1965-டிசம்பர்) | ஓலை 11

சிறை என்ன செய்யும் ?

தென்மொழியின் ஆசிரியர் பெருஞ்சித்திரன் (துரை மாணிக்கம்) சிறையில் அடைக்கப்பட்டுவிட்டார்! அரசினர் விதித்த இருநூறு உருபாத்தண்டத்தினைக் கட்டமறுத்து நான்கு மாதக் கடுங்காவலை அவர் மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளார். இன்றோடு அவர் சிறை சென்று முப்பது நாட்கள் ஆகிவிட்டன. தமிழகத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்து இடிக்குரலில் உரிமை முழக்கிய அவரை இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் அலையும் சுருட்கைகள் புடை நீண்டு வளைத்துப் பிடித்துக் கொண்டன. சிறப்பாசிரியராகவே (Honorary) இருந்து வந்துள்ளமையால் மொழியறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களும், குற்றஞ் சாட்டப்பட்ட கட்டுரைகளோடு நேரடியான தொடர்பில்லாமையால். உறுப்பாசிரியர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர் நல்லுணர் வாளரையும் உண்மைச் சான்றோரையும் தொண்டரையும் சட்டத்தின் வலிந்த பிடியால் நசுக்க நினைப்பது உலகின் அரசியல் வரலாற்றிலேயே நெடுநாளைய பழக்கந்தான். இதில் வியப்பதற் கொன்றுமில்லை. இதிலிருந்து தெரிந்து கொள்வது மட்டுமே ஒன்றுண்டு: அரசிருக்கையில் அமர்ந்திருப்பவர் அதற்கு முன்பு எவ்வாறிருந்தாலும் அவ்விருக்கையில் அமர்ந்த ஞான்றே கோழைகளாயும் குருடராயும் முரடராயும் மாறிவிடுகின்றனர் என்பதே அது !

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர் : தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி.
அச்சகம் : மித்திரா கடலூர்-1.

இந்தியப் பாதுகாப்பு முயற்சிக்குத் தென்மொழி எந்த வகையிலும் இடையூறாக நின்றதில்லை. மாற்றான் புகழ் பாடியது மில்லை இரண்டகச் செய்திகளை வெளியிட்டது மில்லை. மாறாக, இந்தியத் துணைக் கண்டத்துக்கு உண்மையான பாதுகாப்பு எது என்பதையே தென்மொழி வலித்துக் கூறி வந்திருக்கின்றது. ஒற்றுமை பேசும் இந்திய அரசினர் எவ்வெவ் வழிகளில் சென்றால் அந்த ஒற்றுமையை எய்த முடியும் என்று எடுத்துக் காட்டியதும், அவ்வழிகளில் செல்லாமல் குருட்டுத் தன்னலக் கொள்கையை அரசு பின்பற்ற நினைக்கையில் சற்றும் அஞ்சாமல் அதனை இடித்துரைத்ததுமே இத்துறையில் தென்மொழி செய்து வந்த வேலைகளாகும். மற்றப்படி தென்மொழியின் குறிக்கோள் வேறு. உண்மை அரசாயிருந்தால் தென்மொழி ஆற்றி வந்துள்ள ஆற்றி வரும் பணிகள் அத்தனையையும் கருதிப் பார்த்திருத்தல் வேண்டும். மொழியுணர்வு ஒன்றை மட்டுமே மக்கட்கு ஊட்டுவதோடு அமைந்து விடாமல் வாழ்வியலின் பல்வேறு துறைகளிலும் தென்மொழி தன் பார்வையைச் செலுத்தி அங்கங்கு உண்மை நிலைக்கும் உயர்வுக்கும் பாடுபட்டு வந்துள்ளது. ஒழுக்கத்தையும் நல்லுணர்வையும் இலக்கியத் தேனில் குழைத்து மக்கட்கு ஊட்டி மகிழ்ந்துள்ளது மக்களின் அகவியல் வளர்ச்சிக்கும் மாந்தத் தன்மையின் முழுமலர்ச்சிக்கும் தேவையான அடிப்படை நிலைகளை எடுத்தியம்பி வந்துள்ளது. அறிவியல், குமுகவியல், வாழ்வியல், மெய்யறிவியல் போன்ற துறைகளிலெல்லாம் கருத்தைச் செலுத்தி அவ்வவற்றில் மக்கட்கு நல்லறிவு கொளுத்தியிருக்கின்றது. அரசியல், வாழ்க்கை, தொண்டு, இலக்கியம், மொழித்துறை இவற்றிலெல்லாம் மேலோங்கி நிற்கும் போலி நிலைகளைத் துணிந்து அம்பலப்படுத்தி, உண்மை நிலையினை விளக்கிக் கூறியும் எழுதிக் காட்டியும் வந்துள்ளது. போலித் தாளிகைகள் மலிந்து மக்களைக் கெடுத்து வரும் இக்காலத்தில் மக்கட்கு நல்லுணர்வினை அறிவிக்கும் ஓர் உரை கல்லாக இருந்து அவர்களை இயக்கி வந்துள்ளது. இற்றைத் தமிழகத்தில் இதுவரை எவரும் செய்யாத இப்பணிகளை மேற்கொண்டுள்ள தென்மொழி எவ்வெவ் வழிகளிலெல்லாம் நாட்டிற்கு நன்மை பயந்து வருகின்றது என்பதைச் சற்றும் எண்ணிப் பாராமல், அரசினர் தங்கள் தவற்றினைத் தென்மொழி பிறரைப்போல் குழைந்து நெளிந்து சுற்றி வளைத்துப்பேசாமல் கண்ணின்று கண்ணறச்சொல்லி இடித்துரைத்துத் தாக்கி வந்திருப்பது ஒன்றாலேயே பாதுகாப்புச் சட்டத்தினை அதன்மேல் ஏவி விடுவராயின் உண்மைகாண மறுக்கும் குருட்டுத்தனம் என்பதன்றி இதனை வேறெவ்வாறு அமைப்பது? உண்மை எவ்வாறிருப்பினும் சரி, மக்களின் உள்ளுணர்வு எவ்வாறிருப்பினும் சரி, பிழைகள் மலிந்த தன் ஆட்சியை அப்பிழைகளை நீக்காமலேயே நிலைப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்று மட்டுமே அரசு கருதி வந்திருப்பதற்கு இதனினும்

வேறென்ன சான்று வேண்டும்? இந்தியக் குடியரசில் கருத்துரிமையும் எழுத்துரிமையும் வழங்கப் பட்டிருப்பதாகப் பறையறைந்து கொள்கின்றனர். எங்கே அந்தக் கருத்துரிமை? உள்ளத்தில் தோன்றிய உண்மைக் கருத்தினை வலிந்த குரலில் துணிந்து கூறுவதற்கு உரிமை வழங்காத ஆட்சி எப்படிக் குடியாட்சியாக முடியும்? உரிமை கொடுத்தால் கண்டபடி எழுதி விடுவதா என்று கேட்டல் கூடும். கண்டபடி எழுதுபவர் எவர்? கண்டபடி எழுதுபவர் எல்லாரும் அரசினர் பரிவையும் துணையையும் பல்வகையாலும் பெற்றுத் தம் வாணிபத்தை வளர்த்து வருகின்றனர். ஆனால் உண்மையைக் கூறிய தென்மொழிக்கு மட்டும் அரசினரின் கடுபிடி! வழக்கு! தண்டம்! சிறை! எழுத்துரிமையை வழங்கியிருப்பதாகக் கூறும் அரசு எழுத்துரிமைக்குப் பொருள் என்ன என்று அறியாமலிருப்பதே மிகவும் வருந்தத்தக்க நிலையாகும். எழுத்துரிமை என்பது ஒவ்வொருவரும் தாம் நினைத்தவற்றையெல்லாம் நினைத்தபடியும் விரும்பியவற்றையெல்லாம் விரும்பியபடியும் தத்தம் போக்கில் எழுதிக் கொள்வதற்குக் கொடுக்கப்பட்ட உரிமையன்று. அவ்வாறு கருதின் அது பிழையாகும். உண்மையானவற்றையும் சரியானவற்றையும் துணிவுடன் எழுதுவதற்குரிய உரிமையே எழுத்துரிமையாகும். அரசினர் ஆட்சி வினைப்பாடுகளில் நிலை பிறழ்ந்து தவறான வழியில் செல்கையில், அரசாண்மைக்கும் அதிகாரத்துக்கும் அஞ்சித் தலை சாய்த்துக்கொண்டு போய்விடாமல் உண்மையாளர்கள் தங்கள் உள்ளத்திற் பட்டதைத் துணிந்து கூறி அரசினரின் போக்கினைத் திருத்துதல் வேண்டும் என்ற அடிப்படையில் வழங்கப்படுவதுதான் எழுத்துரிமை. ஆனால், அந்தோ, இவ்வுரிமையைத் தவறாகப் பயன் படுத்தி மக்களின் ஒழுக்கக் கேட்டுக்கு அடிகோலியும், கீழுணர்வில் தெறிக்கும் போலி இலக்கிய நஞ்சினை இளநெஞ்சங்களில் ஏற்றியும், வாழ்க்கையின் ஆழத்திற்கு அழைத்துச் செல்லாமல் மேலோட்டமான வெற்றுணர்வு நிலையிலேயே மக்களைப்பிடித்து நிறுத்தியும் தம் பிழைப்புக்காகத் தீது புரியும் தாளிகைகள் பல இருப்பவும், எழுத்துரிமை என்ற பெயரால் அவற்றை விட்டு விட்டு, இவ்வுரிமையைச் சரியாகப் பயன்படுத்தி அரசினரின் பிழைகளை உண்மையின் அடிப்படையில் எதிர்த்துக் குரல் எழுப்புகின்றது என்பதாலேயே தென்மொழியின் மேல் பாதுகாப்புச் சட்டமெனும் விரகான சட்டத்தினை ஏவியிருக்கும் அரசின் பேதைமையை என்னென்றுதான் கூறுவது. கருத்துப்பரிமாற்றங்களால் மக்கள் உண்மையை உணரட்டும் என்றிராமல், உண்மை வெளிப்படின் எங்கே தன் பிழைப்பும், பிழைப்புக்கு வழியான ஆட்சி இருக்கையும் கெட்டுவிடுமோ என்று அஞ்சும் அரசினரின் கோழைத்தனத்தைத்தானே இது புலப்படுத்துகின்றது! அன்று ஆங்கிலேயன் ஆட்சியில் உரிமையில்லை என்று முழங்கியவர்கள், ஆங்கிலேயன் கொணர்ந்த அடக்குமுறைச்

சட்டங்கள் எல்லாம் கோழைத்தனத்தின் விளைவு என்று கொக்கரித்தவர்கள் இன்று அதே ஆங்கிலேயனினும் பன்மடங்கு கோழைகளாகிச் சொந்தநாட்டுமக்களையே அப்படி இப்படி நகரவிடாமல் பாதுகாப்புச் சட்டத்தின் இரும்புப்பிடி கட்குள் ஒடுக்கி வருவது ஏன் ?

தமிழகத்துக்கு மொழியுரிமை வேண்டும் எனக் கேட்பதெங்கே ! இந்தியப் பாதுகாப்புச் சட்டம் எங்கே ! இரண்டுக்கும் என்ன தொடர்பு ? இந்திய நாட்டுக்குத் தற்பொழுது நேர்ந்திருக்கும் புறநெருக்கடி நிலையைத் தலைக் கீடாகப் பயன்படுத்திக்கொண்டே உள் நாட்டில் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள என்னென்ன செய்தல்வேண்டுமோ, எவை எவற்றைப் புகுத்தல் வேண்டுமோ, எவை எவற்றை அழித்தல் வேண்டுமோ, எவை எவற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருதல் வேண்டுமோ அவையவற்றையெல்லாம் நிறைவேற்றிக்கொள்ள வடவ ராட்சி கருதுகின்றது போலும் ! இவவெண்ணத்துக் கிசைந்தாற் போல் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றி வைத்துக்கொண்டு, அச்சட்டத்தில் இன்னின்ன பிரிவுகள் இவ்வாறு கூறுகின்றன; இவற்றுக்கு முரணாக நடப்பவர் எல்லாரும் பாதுகாப்புக்கு கேடு விளைப்பவர் என்று குற்றம் சாட்டி அவர்களை ஒடுக்க நினைப்பது இச்சட்டம் நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் அன்று, இந்தியப் பேராயக் கட்சி ஆட்சியின் பாதுகாப்புக்குரிய சட்டமே என்பதைத்தான் தெளிவாக்குகின்றது. இந்தியப் பாதுகாப்புச் சட்டம் என்பது இந்தியரை (அனைவரையும்) (பிற நாட்டினரிடமிருந்து) பாதுகாக்கும் சட்டம் என்றுதான் பொருள் படவேண்டும். இந்தியர்க்குள்ளேயே ஒரு சிலர்க்குப் பாதுகாப்பாகவும், அப்பாதுகாப்புக்காக வேறுசிலர்க்குப் பாதுகாப்பின்மையாகவும் இச்சட்டம் செயற்படுமாயின் இதனை எங்ஙனம் இந்தியப் பாதுகாப்புச் சட்டம் என்று கூறுவது ?

சட்டம் எல்லாராலும் மதிக்கப் பெறவேண்டுமென்றால் நேர்மை, உண்மை இவற்றின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும். அல்லாக்கால் அஃது ஒரு குறிப்பிட்ட குழுவுக்குரிய செயற்கை வரம்பாகத் தாழ்ந்து விடுகின்றது. ஒன்றாக இயங்கும் ஒரு குழுவினர் தம் இயக்கங்கட்குத் துணை செய்யவும் தமக்கு இடையூறு வாராது காத்துக் கொள்ளவும் தங்கட்குள் சில சட்டதிட்டங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். அவற்றை மீறும் குழு உறுப்பினர்க்கு அச்சட்டங்களின்படி தண்டனையும் விதிக்கின்றனர். அக்குழுவுக்கு உட்படாதார் அச்சட்டங்களை மதிக்காமல் ஒழுகி வருவதால், பொது ஒழுங்கை, மீறியவர்கள் என்று அவர்களைக் கூறவொண்ணாது. கொள்ளைக் கூட்டத்தினர் தங்கட்கெனச் சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டுள்ளனர், கள்ளக் கடத்தற்காரர்களும் அவ்

வாறே! இவர்களின் சட்டங்கள் எல்லாம் சரியானவை என்று கூற முடியுமா ? அவரவர் தேவைக்கு அவரவர் இயற்றிக் கொண்ட சட்டங்கள் அவை. ஆனால் ஒரு நாட்டின், ஒரு பெருங்குடியரசின், அதிலும் இந்தியாவைப் போன்ற ஒரு செயற்கை நாட்டின் சட்டங்கள் எப்படியிருக்க வேண்டும் ? நாட்டில் வாழும் பல்வேறு வகையான மக்கட்கும் ஏற்புடைத்தாகவும். பாதுகாப்பளிப்பதாகவும், அவர் தம் உரிமைகளைப் பேணுவவாகவும் அமைதல் வேண்டுமே! சட்ட மன்றில் பெரும்பான்மையை வலிந்து பெற்றுவிட்ட பேராயக் கட்சி ஆட்சிக் குழுவினர் (அதிலும் சிறப்பாக வடநாட்டினர்) தம் கட்சி நலன்களைக் காத்துக் கொள்வதற்காக இந்தியே ஆட்சி மொழி என்று சட்டத்தை உருவாக்கி, அதனை ஒப்புக்கொள்ளாத மக்கள் மேல் திணிப்பதும் மக்களின் உள்ளுணர்வைச் சட்டத்தின் வலிவால் திரித்துக்கெடுக்க முயல்வதும், உரிமைக்குப் போராடுவாரை வன்முறையால் ஒடுக்குவதும், அவ்வாறு ஒடுக்குவதற்கென்றே வேறு சட்டங்களைப் பிறப்பித்துக் கொள்வதும், ஏதோ ஒரு கொள்ளைக் கூட்டத்தில் நடக்கும் ஆட்சியை நினைவூட்டுகின்றனவே யல்லாமல் நடுவுநிலை பிறழா நல்லாட்சியை நினைவூட்டவில்லையே! ஒரு குடியாட்சி நாட்டின் சட்டங்கள் இப்படியா இருப்பது? வெட்கம்! வெட்கம்!

இந்தியால் தமிழகத்துக்கும் தமிழ்மொழிக்கும் கேடு விளையும் என்று உறுதியாகத் தெரியும் பொழுது அதனை எடுத்துக் கூறி அரசினர் கொள்கைகளை எதிர்ப்பது தவறா ? அப்படி எதிர்க்கப் பெருமலிருக்க அரசினரின் கொள்கைகள் என்ன அவ்வளவு உண்மையும், உறுதியும், பொதுமையும் வாய்ந்தவையா ? ஓர் ஆட்சியை, அதன் அரசியற் கொள்கைகளைச் சான்றோர் மதித்தல் வேண்டுமென்றால் அவ்வாட்சி, அறிவானும் ஒழுங்கானும் தொண்டுணர்வானும் உண்மையானும் நிரம்பப் பெற்றவர்களால் அமைந்திருத்தல் வேண்டும். ஆள்பவர், ஆளப்படுவோரினும் உயர்ந்தோரா யிருத்தல் மன்றோ! நம் இந்திய நாட்டுத் தேர்தல் முறையே இதற்கிடங் கொடுக்கவில்லையே! பொதுவுணர்வும் அரசியல் விழிப்பும் மருந்துக்குக் கூட இல்லாத கல்வியறிவற்ற, எழுத்தறிவற்ற, மக்களே பெரும்பான்மையர்! கற்றருள்ளும், வயிற்றுணர்வாளரே மிகுதி! பொது ஒழுங்கில் நாட்டம் செலுத்தாத பொறுப்பற்ற மக்களை இவ்விந்திய நாட்டினும் வேறெந்நாட்டிலும் காண்டல் அரிது! இத்தகைய குட்டையில் ஊறிய மட்டைகள் தாமே சட்டமன்றங் ஏறி அமர்ந்திருப்பாரும்! பதவி வேட்டையே குறிக்கோளாக் கொண்ட இவர்கள் தேர்தலில் மக்களின் ஒப்போலைகளைப் பெறுவதற்காக நேர்மையற்ற முறைகளையும் சூழ்ச்சிகளையம் கையாண்டுதான் சட்டமன்றில் ஏறி அமர முடிகின்றது. அப்படி அமர்ந்த பின்போ, தாம் அதுவரை செலவிட்ட பொருள்போல்

பன்மடங்கு திரட்டிக் கொள்வதே இவர்கள்தம் முழு மூச்சான வேலையாகிவிடுகின்றது. சலுகைகளையும் குறுக்கு வழிகளையும் கைக்கொண்டு எளிதில் பொருள் சேர்ப்பதற்கே சட்ட மன்றப் பதவிக்குப் பெரும்பாலோர் போட்டியிடுகின்றனர் என்பது நாடறிந்த உண்மை. இத்தகையாருள் கட்சியில் மேலாண்மை பெற்றோர் அமைச்சராகின்றனர். பதவியில் நெடுநாள் நீடிக்கவும், அதிகாரங்களையும் சலுகைகளையும் பெருக்கிக் கொள்ளவும் இவர்கள் செய்துகொள்ளும் ஏற்பாடுகளே இவர்தம் அரசியற் கொள்கைகளாகி விடுகின்றன! இவர்கள் மக்கட்குச் செய்யும் நலங்களெல்லாம் மறு தேர்தலில் தங்கட்கு எவை எவை வெற்றியைத் தேடித் தருவனவோ அவை அவையே!

மக்கட்குத் தவறாது செய்யப்பட வேண்டிய உண்மை நலம் (சீர்திருத்தம்) ஒன்று மக்களின் விருப்புக்கு மாறாக இருந்து தேர்தலில் கிடைக்கும் வெற்றிக்கு ஊறு விளைக்குமாயின் அதனை இவர்கள் மெல்ல நழுவ விட்டு விட்டு அது மக்கள் விருப்பத்துக்கு மாறானது, ஆகையால் அதனை நாங்கள் செய்யோம் என்று பறை முழக்கித் திரிகின்றனர். ஆனால் தேர்தலில் வெற்றி உறுதி, பதவி நிலைப்புக்கு வேறு வழியுண்டு என்றாலோ மக்களின் விருப்பு வெறுப்புகளையல்ல, உள்ளுணர்வுகளையும் உண்மைத் தேவைகளையும் கூட எண்ணிப் பாராமல் தம் அதிகார வலுவால், படைத்துணையால் மக்களின் உரிமைகளை மிதித்து நசுக்கி மேலேறுகின்றனர். இந்நிலையில் இவர்களை ஆட்சியாளர் என்று மதிப்பது எவ்வாறு? இவர்தம் பிழைகளைக் கொள்கைகள் என்று ஒப்புக்கொள்வது எங்ஙனம்? இத்தகைய ஆட்சியை முரட்டு ஆட்சி என்றழைப்பதில் என்ன தவறு?

ஆட்சியாளர் தென்மொழியின் மேல் வீசி எறிந்த குற்றச் சாட்டுகள் 1962 ஆம் ஆண்டு இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 41 ஆம் விதி, ஐந்தாம் பிரிவு; 41 ஆம் விதி 1 ஆ. 41 1 இ. 41 இரண்டாம் பிரிவு என்பனவாகும். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் அமைதியற்ற சூழ்நிலையில் மக்கட்குக் கிளர்ச்சியூட்டவல்லதும் விரும்பத் தகாததும், ஒருதலைச் சார்பானதும் மாணவர்களையும் பிறரையும் வன்முறைகட்குத் தூண்டுவதுமான ஆசிரிய உரைகளை ஆட்சி நாற்காலியிலுள்ளோரின் உடலுக்கும், உள்ளத்துக்கும் புகழுக்கும் ஊறு செய்யும் வகையில் தென்மொழி வெளியிட்டது என்பதே இக்குற்றச் சாட்டுகளின் சாரமாகும். இந்திய ஒற்றுமையினை விழையும் அரசினர் அவ்வொற்றுமையைக் குலைக்கும் வகையில் தமிழ் மக்களைச் சற்றும் மதிக்காமல் அமைதியாக விருந்த அவர்கட்குக் கிளர்ச்சி யூட்டும் முறையில் விரும்பத் தகாததும், ஒருதலைச்சார்பானதுமான இந்தி மொழியை, ஆட்சி அதிகாரத்தாலும் வலிந்த சட்டங்களாலும் வன்முறையாகத் திணித்துத் தமிழர்தம் புற

வாழ்க்கைக்கும், நாகரிகத்துக்கும், பண்பாட்டுக்கும், த்னித்தன் மைக்கும், அகமலர்ச்சிக்கும் ஊறு விளைத்து வந்திருப்பதுமட்டும் குற்றமாகாது போலும்! இதைத் தட்டிக் கேட்பது மட்டும் குற்றம் போலும்!

கடந்த மாசி, பங்குனி இதழ்களில் எழுதப்பட்ட ஆசிரிய வுரைகள், ஐந்து மாதங்களுக்குப் பிறகு ஆட்சியாளரின் கவ னத்துக்கு வந்து, ஏழு மாதங்கட்குப் பின்பு வழக்குத் தொடுக் கப்பட்டு, ஒன்பது மாதங்கள் கழித்துக் குற்றச் சாட்டுக்குரிய தண்டனையை வாங்கித் தந்துள்ளன. இத்தனை மாதங்களாகத் தமிழகத்தில் எவ்வகைக் கிளர்ச்சியும் அமைதி யின்மையும் நிலவி ஆட்சி குலைந்துவிட வில்லையே! தென்மொழியால் தாக் கப்பெற்ற ஆட்சி நாற்காலியாளர் உடலாலும் உள்ளத்தாலும் ஊறுபட்டு, மருத்துவ மனையிலோ, மனநோய் விடுதியிலோ கிடக்கவில்லையே! இஃது ஒன்றே அரசினர் கூறியுள்ள குற் றச் சாட்டுதட்குத் தக்க விடையாய் அமைகின்றதே! இவ் வாறு குற்றஞ் சாட்டியும் பல்வகையாய் அலைத்தும் குலைத்தும் தண்டங் கட்டச் சொல்லியும், மறுத்தால் சிறையிலிட்டும் தென் மொழியின் ஏறு நடையினையும் வீறுமுழக்கினையும் ஒடுக்கிவிட முடியும் என்று அரசினர் நினைப்பராயின் அது வெறுங் கனவே யாகும். ஒருவனின் உள்ளார்ந்த நல்லுணர்வுகளையும் அவ் வுணர்வின் நடுவே நெருப்பெனக்கனன்று பொறிவீசிக்கொண்டி ருக்கும் உண்மை எண்ணங்களையும் அவ்வெண்ணங்களி னின்று வெடித்துக் கிளம்பும் வினையாற்றலினையும், அவ்வினை யாற்றற்குத் துணை நிற்கும் நெஞ்சுரத்தையும் தண்டம் விதிப்ப தாலோ சிறையில் அடைத்து விடுவதாலோ தடை செய்துவிட முடியும் என்றால், சாக்ரடீசு, ஏசுபெருமான், காந்தியடிகள் போன்ற நல்லுணர்வுச் சான்றோர்களின் எண்ணங்களும் எழுச் சிக் கனவுகளும் தடை செய்யப்பட்ட பொழுதே மங்கி மறைந்து போயிருத்தல் வேண்டுமே! அப்படியில்லாமல் அவை இன்றும் நின்று நிலவி மக்கள் உள்ளங்களில் மெய்யுணர்வின் ஒளிக் கீற்றுகளைப் பாய்ச்சிக்கொண்டு வருகின்றனவே! செந்நாக்கு கள் வளைத்து புடைசூழக் கனன்று சுடர்ந்தெரியும் பெரு நெருப்பு எவ்வளவுக் கெவ்வளவு வலிவாகவும் விரைவாகவும் காற்று வீசுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு மேனமேலும் சுடர்விட்டு ஓங்கி எரிதல் போலவே, தென்மொழியின் வலிந்த கொள்கையும் துணிந்த நடையும் அஞ்சா நோக்கமும் துஞ்சா வினையாண்மையும் அரசினர்தம் கடுபிடிகளால் மேன்மேலும் சுடர்விட்டு எரியவிருக்கின்றனவே யல்லால் எவ்வகைத் தானும் அவை அவிந்தொடுங்கிப் போகா என்பதை அர சினர்க்கு நினைவூட்டுகின்றோம்.

இறுதியாகத் தமிழ் மக்கட்கு ஒன்று கூறிக்கொள்ளு வோம். எத்தனை நாட்களுக்கு இந்த வல்லடிமைச் சேற்றில்

உழன்று கொண்டிருக்கப் போகின்றீர்கள் ? தமிழ் மொழியை யும் தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிப் புரக்க உங்கட்கு மனம் இல்லையா? மனத்தில் உரம் இல்லையா ? எதிர்ப்பை ஓரளவு தெரிவித்துவிட்டு அடங்கிப் போய்விடுவதால் பயன் யாது ? ஒரு வினையைத் தொடங்கினால் இடுக்கண்களை எள்ளி நகை யாடி, எதிர்ப்புகளைத் தூசென மதித்து முழு மூச்சுடன் போராடி வெற்றியோடு திரும்ப வேண்டும் இல்லையேல் அம்முயற்சியி லேயே மூச்சினைத் துறக்கவேண்டும். அப்படிக்கின்றி ஒப்புக் காக, நானும் செய்தேன் என்ற பெயருக்காக, தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் போலிமன நிறைவுக்காகச் சிறிது நாள் கத்துவது, அரசினரின் பார்வை மேல் விழுகையில் அடங்கி விடுவது, அடங்கி விடுவதோடு மட்டும் நின்றுவிடாமல் அரசி னர்க்கு நல்ல பிள்ளையாய்த் தம்மைக் காட்டிக் கொள்வதற்காக மனச்சான்றைக் துறந்து போலிக் கொள்கைகளைப் பேசித்திரி வது... இவ்வாறெல்லாம் இற்றைத் தமிழகத் தலைவர்களும் புலவர்களும் இருப்பரேயானால் உண்மைத் தமிழகத்தின் மலர்ச் சியினை என்றுதான் காணப் போகின்றோம் ?

“ இன்று பாகித்தானால் இந்தியாவுக்கு நெருக்கடி நிலை வந்தாலும் வந்தது, அவ்வளவுதான்; இங்குள்ள தமிழர் அனை வரும் பாரதமாதா புத்திரர்களாக மாறிவிட்டனர்! நாடுமுழு வதற்கும் ஏற்பட்டிற்கும் பொதுப்பகை காரணமாக நம் உட் பூசல்களையும் கருத்து வேறுபாடுகளையும் சிறிது நாட்கட்கு ஒதுக்கி வைப்பதில் என்ன தவறு என்று கேட்கலாம். நாம் எவ்வகையானும் இந்தியப்பாதுகாப்புக்கு எதிரிகள் அல்லோம். பாகித்தானின் பொய்மையையும், சீனத்தின் தவற்றுக் கொள்கைகளையும் நாம் தினைத்துணைதானும் வரவேற்பவர்கள் அல்லோம். இந்தியா தன் புறப்பகை ஒழித்து அமைதி காண வேண்டும் என்பதில் எங்கட்குத் துளியும் கருத்து வேறுபா டில்லை. ஆயினும் இப்புற நெருக்கடி காரணமாக நம் உயிர் நிலையான கொள்கைகளை, வாழ்க்கைப் பண்பாட்டை, நாம் இதுவரை கால் ஊன்றி வந்துள்ள அடிப்படைகளை முற்றிலும் துறந்து நம்மையே இழந்து போவதா என்றுதான் கேட்கிறோம்.

பூசல்கட்கு அடிப்படையான சிக்கல்களைச் சிறிது நாள் விலக்கி வைப்பது வேறு; அவற்றை விட்டுக் கொடுத்துவிடு வது வேறு இற்றைத் தமிழக அரசியற் கட்சிகள், தாளிகை யாளரின் குரல்களைச் செவிமடுப்போமாயின், அவர்கள் மொழிச் சிக்கலைச் சிறிது நாட்கட்கு விலக்கி வைக்கவில்லை, விட்டுக்கொடுத்தே விட்டனர் என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கின்றது. விலக்கி வைப்பதென்றால் இருபக்கத் தினருமன்றோ விலக்கி வைத்திருத்தல் வேண்டும்! ஆனால் இன்று நடப்பதென்ன ? நாம் மட்டும் இந்தித் திணிப்புப் பற்றி

செந்தமிழ் தந்த சிறை !

— துரை மாணிக்கம்.

எந்தமிழ் மொழிக்கும் எந்தமி ழர்க்கும்
வந்த இழிவெலாம், வருந்துயர் எல்லாம்
துடைத்திடச் சிறைக்குள் தொண்ணூ றாண்டுகள்
அடைத்துக் கிடக்கப் படுவேன் என்னினும்
உள்ளமும் உயிரும் உவந்துடன் ஒப்புவேன்!
கள்ள மிலாவென் மனைவியும் மக்களும்
என்னைப் பிரிந்திட வேண்டும் என்னினும்
அன்னைத் தமிழ்க்கென அகமகிழ்ந் திசைவேன்!
எவ்வாற் றானும் எந்தமிழ் நாடும்
செவ்விய தமிழும் சிறப்புற் றிலங்க
வேண்டும் என்பதே என்னுயிர் விழைவாம் !
ஈண்டியான் பெற்ற ஈரிரு மாதக்
கடுஞ்சிறை வாழ்வு, எம் கன்னித் தமிழையும்
கொடுந்துயர்ப் பட்ட எந்தமிழ்க் குலத்தையும்
ஒருபடி உயர்த்தும் என்னின் உண்மையாய்
இருபடி வாழ்ந்தேன் என்றே இயம்புவேன் !
இவ்வுடல் தானும் இதனுள் ஓடும்
ஒவ்விய குருதியும் உணர்வும் நரம்பும்
எந்தமிழ்த் தாய்க்கும் எந்தமி ழர்க்கும்
சொந்தம் என்பதால் சோர்வெனக் கில்லை!
என்னிலை தமிழர்க்கு இனியநல் உணர்வினை
முன்னிலும் பன்மடங் காக உயர்த்துக !

தன்னிலை மறந்த தமிழர்க்கு என்சிறை
முன்னிலை உணர்த்தி முழுவுணர் வூட்டுக !
அற்றைப் பெருநிலை அறவே மறந்து
குற்றுயி ருற்றயெந் தமிழ்க்குடி உயர்க !

செந்தமிழ் நாடும் செந்தமிழ் மக்களும்
முந்தை துறந்த மொய்ம்புகழ் மீண்டும்
முளைத்துக் கிளைத்து மூண்டுபுடை விரிக!
களைத்துக் கிடக்கும்எம் தமிழுளம் களிக்க!

ஆண்டுகொண் டிருக்கும் அரசுப்பட் டாளம்
மாண்டுகொண் டிருக்கும் தமிழரை மதிக்க
மீண்டுகொண் டிருக்கும் உரிமை உணர்வினைத்
தூண்டுங் கோலென என்சிறை துலங்குக !

ஒற்றுமை பேசி உரிமையை மறுக்கும்
வெற்றுரை அரசின் வீண்செய லெல்லாம்
குற்றுமி போலத் தமிழர்முன் குலைக !
மற்று அவர் ஆட்சி மண்ணுள் புதைக !

இனியுந் தமிழர் எழாமற் போயின்
கனிந்திடும் உரிமைக் கனிச்சுவை நுகரார் !

மலர்ந்திடும் தமிழக மாட்சிமை அறியார் !
உலர்ந்திடுஞ் சருகா உதிர்ந்திழிந் தழிவார் !
இறுதியாய்த் தமிழரை ஒன்று வேண்டுவேன் !
உறுதி உளத்துடன் பன்முறை உன்னுக !

தமிழ்மொழி தாழ்ந்தால் தமிழினம் வாழுமா ?
தமிழ்மொழி சிதைந்தால் தமிழர் உயர்வரா ?
இந்திய அரசினர் இந்தி மொழிக்குத்
தந்த உயர்வு தமிழ்க்குவேண் டாவா ?

மொழிச்சிறப் பழித்து மொழியுணர் வழித்தால்
எழுச்சி யின்றித் தமிழினம் இன்றினும்
அடிமை யுற்றுத் தாழ்ந்தழி யாதா ?
மிடிமை முற்றும் மீண்டு வராதா ?

ஆகலின் தமிழரே தமிழ்உணர் வாக்குக !
சாகலின் நன்றோ அடிமையாய் வாழ்வது ?
செந்தமிழ் தந்தது சிறையெனில் இதனினும்
எந்தமிழ் உள்ளம் எதற்கினி மகிழும் ?

வீழாது தமிழ்ப்பயிர் விளையத்
தாழாது வித்துக தமிழைத் தமிழரே ! *

கைகொடுத்து உதவுவீர் !

நந்தமிழ் பேணும் செந்தமிழ் அன்பீர்! தனித்தமிழ் வளர்ச்சிக்கும் தமிழக மலர்ச்சிக்கும் அயராது தொண்டாற்றி வரும் தென்மொழியின் பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரன் அரசினர் அளித்த நான்கு மாதக் கடுங்காவல் தண்டனையை ஏற்றுச் சிறை சென்றுள்ளார். தென்மொழியின் வரலாற்றில் மிக நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் உண்மைத் தமிழன்பர்கள் தென்மொழிக்கு ஆற்றவேண்டிய கடன் எத்தன்மையது என்று விளக்கத் தேவையில்லை. தென்மொழி தயங்காது பணியாற்ற, துவளாது நடைபோட உங்களையே நம்பியுள்ளது. அச்சக அமைப்புக்கு வேண்டிய தொகையில் சிறிதளவே இதுவரை திரண்டுள்ளது. விரைவில் முழுப் பொருளையும் திரட்டினாலன்றித் தென்மொழியை நிலைப்படுத்த வேறுவழியில்லை. தென்மொழிக்கு வந்துள்ள இடர். உங்கட்கு வந்ததாகக்கருதி கடனாகவும் நன்கொடையாகவும் தங்கள் அன்பான உதவியை விரைந்து அனுப்புவதோடு ஆங்காங்குள்ள தமிழன்பர்களையும் செல்வர்களையும் ஊக்கித் தென்மொழியின் இயக்கத்துக்கு அவர்கள் துணையையும் எத்துணை விரைவில் முடியுமோ அத்துணை விரைவில் சேர்த்தளிக்க வேண்டுகின்றோம் !

அமைச்சர்.

தொடரோவியம்.

போர் மறவனும் காதலும்.

சியார்சு பெர்ணர்டு சா. தமிழ்ல் : வழுதி

பெட்காஃப் : மண உறுதி நடக்கவில்லையா ? திருட்டுப் பயலே ! ஏன், உங்கள் மண உறுதிக்கென்று அன்றைக்கு என்னிடம் பணம் வேறு வாங்கிக் கொண்டாய். அவள் இரெய்னு விடமிருந்து அந்தப் பூச்சு வளையலைப் பெற்றுக் கொண்டாள்

நிகோலா : (அமைதியான உருக்கமுடன்) அப்படித் தெரியப்படுத்திேனும்; அவ்வளவுதான். உலூக்காவுக்கு ஒரு பாதுகாப்புக்காகத்தான் அவ்வாறு செய்தோம். தன் நிலைமைக்கு மீறிய மனம் அவளுக்கு. அவளுக்கு நான் ஒரு நம்பிக்கையான வேலையாளாக இருந்ததற்கு மேல் வேறெதுவும் இல்லை. உங்களுக்குத் தெரியும் ஐயா, நான் பிற்காலத்தில் சோபியாவில் கடை வைத்து நடத்தப் போகிறேன். உலூக்கா பெரிய குடும்பத்தில் மணம் புரிவாளானல் அவளுடைய பரிந்துரையும், வாடிக்கையும் எனக்குத் தேவை. (அனைவர் உள்ளத்திலும் பதியத்தக்க அறிவுத் தெளிவுடன், எல்லாரும் வியக்க, அறையை விட்டு வெளியேறுகிருன்).

பெட்காஃப் : (அமைதியை உடைத்து) சரி ... நான் ... உகும்! ...

செருசியசு : இஃது ஒன்று மிகச் சிறந்த மறமாக இருத்தல் வேண்டும். அல்லது மிக இழிந்த கோழைத்தனமாக இருத்தல் வேண்டும். இரண்டில் எது, பிளண்டுசிலி ?

பிளண்டுசிலி : மறத்தனமோ, கோழைத்தனமோ, விட்டுத் தள்ளு. பல்கேரியாவில் நான் கண்டவர்களுள் நிகோலா மிகவும் கெட்டிக்காரன். அவனுக்குப் பிரஞ்சு மொழியும் செருமன் மொழியும் பேச வருமானல் நான் என் உணவு விடுதிக்கு அவனைப் பொறுப்பாளனக ஆக்குவேன்.

உலூக்கா : (திடுமென, செருசியசின்மேல் பாய்ந்து) இங்கு ஒவ்வொருவரும் என்னை எள்ளி இழிவு படுத்துகிருர்கள். நீர்தாம் அவர்கட்கு வழி காட்டினீர். நீர் என்னிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

(செருசியசு, அளவைப் பொறி பொருத்தானைத் தொட்டதும் முட்களை மடக்கிக் கொள்வது போலத் தன் கைகளை மடக்கிக் கொள்கிருன்).

பிளண்டுசிலி : (அவன் பேசுவதற்குள்) ஊகும்; பயனில்லை. அவர் ஒருநாளும் மன்னிப்புக் கேட்கமாட்டார்.

உலூக்கா : உம்மிடத்தில் அப்படி; நீர் அவருக்குச் சரி நிகரானவர்; பகைவர். ஆனுல் ஏழைப் பணிப்பெண்தானே நான். என்னிடத்தில் மன்னிப்புக் கேட்க மறுக்க மாட்டார்.

செருசியசு : (அதனை ஒப்புக்கொண்டு) நீ சொல்வது சரி. (தன் முழங்கால்களை வளைத்து மிகவும் பணிவு முறை விளங்க) என்னை மன்னித்து விடு.

உலூக்கா : மன்னித்துவிடுகிறேன் (அவள் மெல்லத் தன் கையை நீட்டுகின்ருள். அக்கையை அவன் முத்தமிடுகின்ருன்) நீர் என் கையைத் தொட்ட இந்த நொடியிலிருந்து நான் உம் மனைவியாகிவிட்டேன் தெரிகிறதா ?

செருயசு : (சடக்கென எழுந்து முன்பு கூறியதை நினைவு கூர்ந்து) ஆ! அதை மறந்துவிட்டேனே!

உலூக்கா : நீர் விரும்பினுல் பின் வாங்கிக் கொள்ள லாம்.

செருசியசு : பின் வாங்குவதா! ஒருபொழுதும் இல்லை. நீ எனக்குரியவள். (அவளைக் கையால் அணைத்துக் கொள்கின்ருன்)

(காதரின் அம்மையார் வருகிருர். உலூக்கா செருசியசின் அணைப்பில் இருப்பதையும், மற்றவர்கள் திகைப்பொடு கூடிய பெரும் வியப்புடன் பார்த்துக்கொண்டு நிற்பதையும் காண்கிருர்)

காதரின் : என்ன இது!

(செருசியசு உலூக்காவை வீட்டுவிடுகிருன்)

பெட்காஃப் : அதாவது, – வந்து, - செருசியசு, இரெய்னுவுக்கு மாருக, உலூக்காவை மணந்து கொள்ளப்போகிருன் போல் தெரிகிறது. (காதரின் சினத்துடன் அவர்மேல் பாய வாயெடுக்கிருர். ஆனுல் பெட்காஃப் அதைத்தடுத்து நிறுத்தி ஏளன வெறுப்புக்குரலில்), என்னை ஏன் முறைக்கிருய் ? எனக்கும் இதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. (கனப்பருகில் செல்கிருர்)

காதரின் : உலூக்காவையா! செருசியசு, உறுதி மொழியால் நீ எங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கிருய்.

செருசியசு : (கைகளைக் கட்டிக்கொண்டு) என்னை எதுவும் கட்டுப்ப்டுத்துவதில்லை.

பிளண்டுசிலி : (இத்தகைய பொது அறிவுத் தெளிவு கண்டு மகிழ்ந்து) சாரனுபு, வாழ்க! உன் மறவுணர்வு வாழ்க்கைக்குப் பயன்படுமாறு கூட அமைந்துவிட்டதே! (உலூக்கா

முகம் நோக்கி) அருள் இளம் சீபருமாட்டி! இனிது வாழ வாழ்த்துகின்றேன். (அவள் கையை முத்தமிடுகிருன். இரெய்ஞு வெறுப்படைகிருள்; பின் தன் இடத்துக்குத் திரும்புகிருன்.)

காதரின் : உலூக்கா, நீ புறங்கூறித் திரிந்திருக்கிருய்.

உலூக்கா : நான் இரெய்ஞுவுக்கு ஒன்றும் கேடு செய்யவில்லை.

காதரின் : (மதிப்பில்லாமல் பெயர் கூறியமைக்கு முனிந்து, செருக்குடன்) – இரெய்ஞுவா!

(இரெய்ஞுவும் முனிவுடன் சீறுகின்ருள்)

உலூக்கா : இரெய்ஞு என்று அழைக்க எனக்கு உரிமை உண்டு. அவள் என்னை உலூக்கா என்று அழைக்கவில்லையா? அந்த சுவிசுக்காரர் திரும்பி வந்தால் அவள் உம்மை மணக்க மாட்டாள் என்று நான் படையாள்நர் சாரஞுபிடம் கூறினேன்.

பிளண்டுசிலி : (மிகவும் வியப்புடன் எழுந்து) என்ன !

உலூக்கா : (இரெய்ஞுவின்பால் திரும்பி) செருசியசை விட அவர்மேல்தான் உனக்கு அன்பு என்று நினைத்தேன். நான் நினைத்தது சரி என்பது உனக்குத்தானே நன்கு தெரியும்.

பிளண்டுசிலி : என்ன முட்டாள்தனம்! படையாள்நர் அவர்களே, அம்மையார் அவர்களே, நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்த இளநங்கை என் உயிரை மட்டுமே காப்பாற்றினுள். வேறெதுவும் நடக்கவேயில்லை. அவள் என் மேல் துரும்பளவு கூட அக்கறை வைக்கவில்லை... நல்ல கூத்து இது!—, என்னையும் பாருங்கள் அவளையும் பாருங்கள். செல்வம், இளமை, அழகு, எல்லாம் அவளுக்கிருக்கின்றன. அவள் கனவுகள் கற்பனைகள் எல்லாம், கனவுலக இளவரசர்களைப் பற்றியும், உயர்பெரும் பண்புகளைப் பற்றியும், குதிரைப் படைப் பெருமறத்தைப்பற்றியும், இன்னும் எதை எதையோ பற்றியும் இருக்கின்றன. நானே ஓர் எளிய சுவிசுப் போர்மறவன். பதினைந்து ஆண்டுகள் பட்டாளத்து நடுவிலும் போர்களின் நடுவிலும் கழித்துவிட்டு, மதிப்பான வாழ்க்கை என்ருல் என்ன என்றே அறியாதவன் ஏதுமற்ற நாடோடி. மாற்ற முடியாத ஒருவகைக் களியச் சுவை உணர்வால் வாழ்க்கை வாய்ப்புகளை எல்லாம் கெடுத்துக்கொண்டவன்....

செருசியசு : (ஊசியால் குத்தப் பெற்றவன்போல் துள்ளி எழுந்து நம்ப முடியாத பெருந்திகைப்புடன் இடை மறித்துப் பேசுகிருன்) என்ன, என்ன, பிளண்டுசிலி, உன் வாழ்க்கை வாய்ப்புகளைக் கெடுத்தது எது என்று சொன்னுய்?

பிளண்டுசிலி. (தயங்காமல்) களியச்சுவை உணர்வு! சிறுவனுக இருக்கும் பொழுது இரண்டு முறை வீட்டை விட்டு ஓடினேன். தந்தையாரின் தொழிலைச் செய்யாமல், படையில் போய்ச் சேர்ந்தேன். தப்பி வரும்பொழுது, ஒழுங்காக எங்காவது கிடங்கறையில் போய் ஒளிந்து கொள்ளாமல் இந்த வீட்டுப் பலகணி வழியாக ஏறிக் குதித்தேன். இந்தப் பெண்ணை மற்ருெரு முறை பார்த்துக்கொள்ளலாமே என்று நினைத்துத்தான் திருட்டுத்தனமாக மறுமுறையும் இங்கே வந்தேன். என் அகவையில் வேருெருவனுக இருந்தால் அந்தக் குப்பாயத்தை... வேறு வழியில் கொடுத்தனுப்பி யிருப்பான்.

பெட்காஃப் : என்னுடைய குப்பாயம்!

பிளண்டுசிலி : ஆமாம். உம்முடைய குப்பாயமேதான். அதைக் கொடுத்தனுப்பிவிட்டுப் பேசாமல் வீட்டுக்குப் போயிருக்கலாம். ஓர் இளம்பெண் காதலிக்கத் தக்க அப்படிப்பட்ட ஆளா நான்? ஏன், அகவையைத்தான் பாருங்களேன்! எனக்கு முப்பத்து நான்கு! இந்தப் பெண்ணுக்கு எப்படியும் பதினேழுக்கு மேல் இருக்காது. (இந்த மதிப்பீடு ஒரு பரபரப்பைக் கிளப்புகிறது. அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கின்றனர். பிளண்டுசிலி அஃதறியாமல் தொடர்ந்து பேசுகிருன்.) எனக்கு வாழ்வா சாவா என்று அமைந்திருந்த அந்தப் போராட்டம் எல்லாம் இந்தப்பெண்ணுக்குப் பள்ளிப்பிள்ளை விளையாட்டு! — இனிப்பு நொறுவை......, கண்பொத்தி விளையாட்டு! இதோ சான்று! (புகைப்படத்தை எடுக்கிருன்) நான் கேட்கிறேன், நல்ல பெரிய பெண் ஒருத்தி இதையெல்லாம் விளையாட்டாக நினைத்து, இதை அனுப்பி. அதிலும் "இரெய்னு இனிப்பு நொறுவைப் போர் மறவனுக்கு நினைவாக அளித்தது" என்று எழுதியிருப்பாளா? (புகைப்படத்தைக் காட்டுகிருன், தன் கருத்தை யாரும் மறுக்கமுடியாத அளவுக்கு அது பொருத்தமான சான்ருய் அமைந்துவிட்டது என்பது போல.

பெட்காஃப் : நான் இதைத்தானே தேடிக்கொண்டிருந்தேன் எப்படி அங்கே போயிற்று? (அருகில் வந்து அதைப் பார்த்துவிட்டு இருக்கையில் அமர்கிருர்)

பிளண்டுசிலி : (இரெய்னுவிடம், மன நிறைவோடு) சிக்கலைச் சரிப்படுத்திவிட்டேன் இல்லையா பெருமாட்டி!

இரெய்னு : (மிசைப்பலகை அருகுசென்று அவனை எதிர் நோக்கி,) நீர் உம்மைப் பற்றிச் சொல்லிக் கொண்டதெல்லாம் சரி. நீர் களியச்சுவை வாய்ந்த முட்டாள்! (வாய் பேச முடியாத அளவு அதிர் வியப்புறுகிருன்) அடுத்த முறையாவது, பதினேழாண்டுப் பள்ளிச் சிறுமிக்கும் இருபத்து மூன்று

அகவை நிறைந்த இளம் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெரிந்துகொள்ளும்.

பிளண்டுசிலி : (வாயடைத்து) இருபத்து மூன்று அகவை! (இரெய்னு வெறுப்புடன் அவன் கையிலிருந்து புகைப் படத்தைப் பறித்துக் கிழித்துத் துண்டுகளை அவன் முகத்தில் வீசி எறிகின்ருள். பின் தன் இருக்கையை அடைகின்ருள்).

செருசியசு : (தனக்குப் போட்டியாக வந்தவனின் திண்டாட்டத்தைக் கண்டு மகிழ்ந்து) பிளண்டுசிலி, என் கடைசி ஒரு நம்பிக்கையும் போயிற்று. எல்லாவற்றையும் போல உன் மதி நுட்பமும் ஓர் ஏமாற்று. என்னைவிட நீ அறிவில் மட்டம்.

பிளண்டுசிலி : (திணறலுற்று) இருபத்து மூன்று! இருபத்து மூன்று! (எண்ணிப் பார்க்கிருன்) உம். (விரைவில் ஒரு முடிவுக்கு வந்தவனுக... பெட்காஃபிடம் நெருங்குகிருன்) அப்படியானுல், பெட்காஃப் அவர்களே, படையாள்நர் சாரனுபு அவர்கள் விலகிவிட்டதால், அவர்க்கு மாருக நானே தங்கள் மகளை மணம் புரிந்துகொள்ள விருப்பம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரெய்னு : என்ன துணிச்சல்!

பிளண்டுசிலி : நீ இன்று பிற்பகலில் என்னிடம் கூறியவற்றையெல்லாம் நான் பொருளுடையனவாகவே கருதிக்கொள்ள நேருகிறது. உனக்கு அகவை இருபத்து மூன்று என ஆகிவிட்டதால்.

காதரின் (பெருமிதத்துடன், ஆனுல் மதிப்பாக) ஐயா, நீர் என் மகளின் நிலை மதிப்பையோ, அல்லது படையாள்நர் சாரனுபின் நிலைமதிப்பையோ சிறிதாவது எண்ணிப் பார்க்கவில்லை போலும்! பெட்காஃப் குடும்பமும், சாரனுபு குடும்பமும்... இந்த நாட்டிலேயே மிகுந்த செல்வமும் புகழும் தலைமையும் வாய்ந்த இரு குடும்பங்கள் ஆகும்! எங்கள் நிலை வரலாற்றுச் சிறப்புடையது. இருபது ஆண்டுப் பழமை வாய்ந்தது எங்கள் வரலாறு.

பெட்காஃப் அதையெல்லாம் விட்டுத் தள்ளு காதரின்! (பிளண்டுசிலியை நோக்கி), நிலைமை மதிப்பை மட்டுமே பார்த்தால் எங்களுக்கு மகிழ்ச்சிதான் பிளண்டுசிலி! ஆனுல்,... இரெய்னு மிகவும் செல்வ வாழ்க்கையில் பழக்கப்பட்டுப் போனவள். செருசியசிடம் இருபது குதிரைகள் உள்ளன.

பிளண்டுசிலி : எதற்காக அந்த இருபது குதிரைகள்? என்ன, வட்டாட்டமா நடத்தப் போகிறோம்?

காதரின் : (கடுமையாக) என் மகள் ஒரு முதல் தரக் குதிரைக் கொட்டடிக்குப் பழக்கப்பட்டுப் போனவள், தெரியுமா ?

இரெய்ஞ : உசு ! என்னை இழிவுபடுத்துகிறீர்களே !.

பிளண்டுசிலி : ஓ ! சரி ! சொத்து நிலையைப் பார்க்கிறீர்களா ? அப்படியானல், இதோ ! (கடுவிரைவுடன் மிசைப் பலகைக்குத் தாவுகிருன். நீல உறையிலுள்ள தாட்களை எடுத்துக் கொண்டு செருசியசை நோக்கித் திரும்புகின்ருன்) — எத்தனை குதிரைகள் என்று சொன்னுய் ?

செருசியசு : இருபது, ஐயன்மீர் !

பிளண்டுசிலி : என்னிடம் இருநூறு குதிரைகள் உள ! (திகைப்புறுகின்றனர்.) எத்தனை வண்டிகள்?

செருசியசு : மூன்று.

பிளண்டுசிலி : என்னிடத்தில் எழுபது உள ! அவற்றுள் இருபத்து நான்கில். பன்னிரண்டு பேர் உள்ளேயும், பெட்டியில் இருவரும் உட்காரலாம், ஓட்டியையும், வழிகாட்டியையும் தவிர. சரி எத்தனை விரிப்புத் துணிகள் உங்களிடம் ?

செருசியசு ! இதெப்படி எனக்குத் தெரியும் ?

பிளண்டுசிலி : நாலாயிரம் இருக்குமா ?

செருசியசு : இல்லை.

பிளண்டுசிலி : என்னிடம் உண்டு அதுமட்டுமா ! ஒன்பதாயிரத்து அறுநூறு இணை விரிப்புகள். போர்வைகள்! இரண்டாயிரத்து நானூறு பஞ்சு மெத்தைகள்! பத்தாயிரம் கத்திகள், முட்கள், கரண்டிகள்! மூந்நூறு வேலையாட்கள்! அரண்மனை போன்ற ஆறு வளமனைகள்! - இரண்டு பெருங்குதிரைக் கொட்டடிகள்! ஒரு தேயிலைத் தோட்டம்! குடியிருப்பு வீடு ஒன்று. கடமையில் சிறந்து விளங்கியதற்காக நான்கு பதக்கங்கள் பெற்றிருக்கிறேன். ஓர் அலுவலரின் பதவியும், பெருங்குடி மகனின் மதிப்பும் எனக்குண்டு. என் நாட்டு மொழிகளோ மூன்று! இவ்வளவும் உடைய ஓர் ஆளை இந்தப் பல்கேரியாவில் காட்டுங்கள் பார்க்கலாம் !

பெட்காஃப் ; (குழந்தைத் தனமான அச்சத்துடன்) தாங்கள் சுவிடசர்லாந்தின் பேரரசர் பெருமானே ?

பிளண்டுசிலி ; என் நிலை சுவிட்சர்லாந்திலேயே மிக உயர்ந்தது. நான் உரிமை பெற்ற குடிமகன்.

காதரின் . அப்படியானல், படைஞர் பிளண்டுசிலி அவர்களே, என் மகள் உம்மையே தேர்ந்தெடுத்திருப்பதால்...

இரெய்ஞ (கலகம் செய்பவள்போல) நான் ஒன்றும் அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை...

காதரின் (அவளைப் புறக்கணித்து) அவள் மகிழ்ச்சிக்குக் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை. (பெட்காஃப் பேச வாயெடுக்கிறார்) பெட்காஃப் அவர்களின் எண்ணமும் அதுதான்.

பெட்காஃப் : ஓ எனக்கு மிகவும் மகிழ்ச்சிதான்! இருநூறு குதிரைகள் ! ஆடேயப்பா !

செருசியசு : பெருமாட்டி கூறுவது என்னவோ ?

இரெய்னு : பெருமாட்டி கூறுவது இதுதான்:– விரிப்புத் துணிகளையும் உந்துவண்டிகளையும் அவரே வைத்துக் கொள்ளட்டும். மிகுந்த விலை கொடுப்பவர்களிடம் கொடுத்துவிட நான் என்ன விற்பனைப் பொருளா ? (முதுகைத் திருப்பிக் கொள்கின்றாள்.)

பிளண்டுசிலி : இந்த விடையை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நான் ஓர் எதிரியாக, இரவலனாக, பட்டினி கிடந்தவனாக இருந்தபொழுது உன் துணை நாடினேன்; நீ என்னை ஏற்றுக்கொண்டாய். உன் கையை நான் முத்தமிட இசைந்தாய். உன் கட்டிலில் என்னைத் துயில வைத்தாய். உன் இல்லத்தில் எனக்கு இடமளித்தாய்.

இரெய்னு : இவற்றையெல்லாம் நான் சுவிட்சர்லாந்தின் பேரரசர்க்கு என்று அளிக்கவில்லை.

பிளண்டுசிலி : அதைத்தான் நானும் சொல்கின்றேன். (அவள் தோள்களைப்பற்றித் தன் முகத்துக்கெதிராகத் திருப்புகின்றான்.) இப்பொழுது சொல், இவற்றையெல்லாம் யாருக்களித்தாய் ?

இரெய்னு : (நெகிழ்வுற்று, நாணங்கலந்த புன்னகையுடன்) என் இனிப்பு நொறுவைப் போர் மறவருக்கு.

பிளண்டுசிலி : (சிறுவனைப்போல் களிப்பு நிறைந்தநகையுடன்) அவ்வளவு போதும்; நன்றி. (தன் மணிப் பொறியைப் பார்க்கின்றான். வேலை நினைவு வந்துவிடுகின்றது) நேரம் ஆகிவிட்டது, பெட்காஃப், அந்தப் பட்டாளங்களை நீர் சரியாகச் சமாளித்து விட்டீர் என்பதால் இன்னும் திமோக்குப் பிரிவைச் சேர்ந்த படைகளை உம்மிடத்தில் ஒப்படைப்பது உறுதி. அவற்றை உலோம் பலன்கா வழியாக அனுப்பி வையுங்கள். சாரனுபு, நான் திரும்பி வரும் வரை நீர் திருமணம் செய்ய வேண்டாம். இன்றைக்குச் சரியாகப் பதினைந்தாம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை ஐந்து மணிக்கு நான் தவறாமல் இங்கிருப்பேன். அன்புள்ள பெருமாட்டிமார்களே (காலணி கிறீச்சிடுகிறது) வணக்கம். (படைஞனுக்குரிய வணக்கம் செலுத்திவிட்டு வெளியேறுகிறான்).

செருசியசு : எப்படிப்பட்ட மாந்தன்! இவன் மாந்தன் தானா ?

● * ●

முற்றும்

(அவர் நினைவாக)

சிறைக்கும் சாவுக்கும் அஞ்சாமை வேண்டும் !

— பாவேந்தர் பாரதிதாசன்.

நாயும் ஒப்பாத அடிமை வாழ்வை
நாலு கோடித் தமிழரா ஒப்புவர் ?
தாய்நாட் டிற்குத் தமிழர்நா டென்றுபேர் ;
தமிழ ருக்கே மறவர் என்றுபேர் !

தேய்தல் வளர்தல் திங்கள் வழக்கம்
தேயாப் புகழ்செயல் எங்கள் வழக்கம் !
தாய கத்தின் மீட்சிப் போரினில்
சாவும், தமிழர்க் கமிழ்தாய் இனிக்கும் !

குறைஒன்று தாயகம் கொள்ளவும் பாரோம்
குன்று பெயரினும் உள்ளுரம் தீரோம்.
சிறையும் நோயும், கட்டிலும் தென்றலும் !
செந்நீர் சிந்தல் தேன்சிந்து பாடல் !

ஒருவன் நாட்டை ஒருவன் பறிக்கும்
உள்ளப் போக்கைத் தமிழன்கை நறுக்கும்.
அருள் ஒன்றே சட்டம் ! மக்கட்கே ஆட்சி
அமைதி நிலைஎன்று கொட்டடா பறை !
தமிழர் கொடைஎன்று கொட்டடா பறை !

பழித்தவாய் மூடுமுன் வடபுலம் தாக்கும்
பழந்தமி ழகமா அடிமை ஏற்கும் ?
வழித்தான் தமிழகச் செல்வம் அனைத்தும்!
மக்களை அனுப்புக அன்னைமீர் போருக்கே !

வதைக்கும், சிறைக்கும், குண்டுக்கும், எதிர்ப்புக்கும்,
வாட்டிடும் படுகொலைக் கும்,வரும் சாவுக்கும்
அசைக்க முடியாத மலையை நிகர்க்கும்
அஞ்சாமை ஒன்றே வேண்டும் தமிழர்க்கு.

இவ்விதழைப் படிப்போர் ஒவ்வொருவரும் காணவேண்டிய அறிக்கை.

தென்மொழி தொடங்கி ஏறத்தாழ நான்காண்டுகள் ஆகி விட்டன. இதுவரை தென்மொழி எத்தனையோ கைகளில் தவழ்ந்திருக்கும். எத்தனையோ மனங்களில் குடி புகுந்திருக்கும். எத்தனையோ பெயர்கள் தென்மொழியின் ஏறுநடையால் வீறுமுழக்கால் கவரப் பெற்று அது வழங்கிய கருத்துக் கருவூலத்தினை இலக்கியச் செல்வத்தினை நுகர்ந்து பயன் பெற்று மகிழ்ந்திருப்பர். தென்மொழியை ஊன்றிப் படிப்போர் எவரேயாயினும் அவர் தென்மொழியால் நல்லுணர்வு ஏற்றப் பெருதிரார். அத்தகையோர் தென்மொழிக்குத் தங்கள் கடனை ஆற்ற வேண்டாவா ? தென்மொழி ஆசிரியர் தாம் தொடங்கிய அச்சக அமைப்புத் திட்டத்தினைச் செவ்வனே நிறைவேற்றி முடிப்பதற்குள், இடையில் தம் தளராத் தமிழ்ப்பணி காரணமாக அரசினரால் சிறைப்படுத்தப்பட்டுள்ள இந்த நெருக்கடி வேளையில், அவ்வச்சக அமைப்புத் திட்டத்தினைத் தொடர்ந்து வெற்றியாய் முடிக்கத் தம் பங்கினைச் செலுத்த வேண்டாவா ? தற்பொழுது தென்மொழி தமிழகமெங்கணும், மலை நாட்டிலும் ஈழத்தும் தமிழர் உறையும் பிற பகுதிகளிலும் படிக்கப்பெற்று வருகின்றது. இதழை வாங்குபவர் ஏறத்தாழ மூவாயிரம் பெயர்களாவது இருப்பர் என்று கூறலாம். அன்பர்பால் பெற்றுப் படிப்பவர்களைக் கணக்கிடின் அது பல்லாயிரமாக விரியும். இன்று தென்மொழிக் கேற்பட்டிருக்கும் இடர்ப்பாட்டு நிலை சொல்லுந் தரமன்று. வினையாற்றலே உருவாகிய ஆசிரியரோ சிறையில் ! அவரால் தொடங்கப் பெற்ற அச்சக அமைப்புத் திட்டமோ அரைகுறையில்! சூழ்நிலைகட்கேற்பத் தன் நடையை நெளித்துக்கொண்டும் கொள்கையை வளைத்துக் கொண்டும் செல்லாமல் சீரிய நோக்கொடு நேரிய பாதையில் செம்மாந்த நடையிடும் காரணத்தால் தென்மொழிக்கு ஏற்படுவன எதிர்ப்பும் இடர்ப்பாடுமே யல்லாமல், அணைப்பும் துணையும் எள்ளத்தனையுமில்லை ! அச்சக அமைப்புத் திட்டம் வெளியிடப் பெற்றுப் பன்னாட்களாகியும் இன்னும் தேவையான தொகை திரளவில்லை. அன்பர்தம் உள்ளங்களில் நல்லுணர்விருந்தும் அது கீண்டப் பெருவாறு உலகியல் எண்ணங்களால் அமுக்கப் பட்டுக் கிடக்கின்றது என்றுதான் கூறவேண்டும். நிலையற்ற பொருள்கட்காகவும், தற்காலிகத் தேவைகட்காகவும், தோன்றி மறையும் நொடிப் பொழுதைய விருப்பங்கட்காகவும், உலகியல் வெற்று வினைப்பாடுகட்காகவும் பெருந்தொகையைச் செலவிடும் அன்பர்கள் தாம் செலவிடும் தொகைதான் எவ்வளவு, அதனால் விளையும் பயன்தான் என்ன என்பதைச் சற்றே நின்று எண்ணிப் பார்ப்பாராயினும் போதும் உண்மை புலனாகிவிடும். இதுவரை தம் கைகளிற் புரண்டு சுவடின்றி மறைந்த பொருள்தான்

எத்தனைப் பெரியது, அதனோடு ஒப்பிடுங்கால் தென்மொழி தங்களிடம் வேண்டும் தொகை எத்தனைச் சிறிது என்பது புலனாகாமற் போகாது. தென்மொழிக்கு அன்பர்கள் தரும் காசு ஒவ்வொன்றும் நிலைப்பாடான வினைக்கே. அதன் விளைவு இத்தமிழகம் உள்ளவரை நிலை நிற்கும். தென்மொழி இதழன்று; ஓர் இயக்கம்! தமிழக மறுமலர்ச்சி இயக்கம்; நல்லுணர்வியக்கம். உண்மைத் தமிழரின் உரிமை முழக்கத்தினை உலகுக்கே உணர்த்தும் இயக்கம்! அதன் பணிக்கு உதவுவது தமிழரின் கடன். இதழைப் படிக்கும் ஒவ்வொருவரும் இதனை எண்ணின் போதுமே! தங்கள் பங்காக ஒவ்வொருவரும் ஒவ்வோர் உருபா அன்பளிப்புத் தரினும் போதுமே! மூவாயிரம் பெயர்கள் ஆளுக்கு ஓர் உருபா அளிப்பினும் மூவாயிரம் உருபாக்கள் திரளுமே!

ஆம்! இதழைப் படிக்கும் அன்பர்களே. மாணவர்களே, இளநங்கையர்களே, ஆசிரியர்களே, புலவர்களே, அரசியல் ஈடுபாட்டினரே, குமுகாயத் தொண்டரே. ஒவ்வொருவரும் ஒவ்வோர் உருபா அளியுங்கள் போதும்! தென்மொழியை இது வரை இலவசமாகப் பெற்றுப் படித்து வந்திருக்கும் தமிழ்ப் பேராசிரியன்மார்களே! இதுவரை நீங்கள் தென்மொழிக்கு ஒரு நன்றிச் சொல்தானும் பகர்ந்ததில்லை... இப்பொழுதாவது உங்கள் நன்றிக் கடனாக ஒவ்வோர் உருபா அனுப்பி வையுங்கள்! தமிழரின் உணர்வு உண்மைதானா என்று உரசிப் பார்த்துக்கொள்ள இஃது ஓர் உரைகல்! இன்றே உங்கள் பங்கை அளியுங்கள்! தென்மொழி அச்சக அமைப்பு நன்கொடைத் திட்டம் என்ற தலைப்பில் நீங்கள் பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர்,
தென்மொழி, கடலூர்-1.

— அமைச்சர்.

பக்கங்கள் குறைந்ததேன் ?

ஆசிரியர் பெருஞ்சித்திரன் அவர்கள் சிறைப்பட்டுள்ளமையாலும், தென்மொழி அச்சக அமைப்புக்கான பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியிருப்பதாலும், பலவகை நெருக்கடிகளிடையிலும் இதழைக் குறித்த காலத்தில் வெளிக்கொணர வேண்டி இவ்விதழின் பக்கங்களைக் குறைக்க நேர்ந்துள்ளது. மெய்த்தமிழ் அன்பர்கள் இக்குறையினைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

— அமைச்சர்.

‘ குற்றியலுகரம் ’ உயிரீறே

மொழிப்பெரும் புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ.

‘ செந்தமிழ்ச் செல்வி ’ ௩௬–ஆம் சிலம்பு ௧௦–ஆம் பரலில், புலவர் திருமுதுகுன்றம் என்பார், குற்றியலுகரம் பற்றி வரைந்துள்ள கட்டுரையில், குற்றியலுகரம் மெய்யீறென்று பெரும்புலவர் வேங்கடராசுலு அவர்களும், அஃது உயிரீறென்று யானும், மாறுபட்டுக் கூறும் கூற்றிரண்டனுள் ஒன்றைத் துணிவார் போன்று தொடங்கி, பழமொழிக் கோமுட்டியார் போல் இருவர் மாறுகோள் இரண்டுந் தழுவல் என்னும் மதம் பற்றி, அஃது உயிரீறும் மெய்யீறுமல்லாத சார்பெழுத்தென்று முடிபு கட்டியதுமன்றி, அதைத் தொல்காப்பியர் மீது ஏற்றியுமுள்ளார்.

பெரும்புலவர் வேங்கடராசுலு புலமையில் என்னினும் மிகப் பெரியாரே. ஆயின், அவர் தமிழ்ப் பற்றில்லாத் தெலுங்கராதலின், ஆரிய அடிப்படையில் தமிழை ஆய்ந்து திரிபுணர்ச்சியால் சறுக்கினர்.

யான் திருச்சிப் புத்தூர் ஈபர்கண்காணியார் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியனாயிருந்த பொழுதே, திருவையாற்று அரசர் கல்லூரித் தமிழ்மாணவர் விருப்பத்திற்கிணங்கி அங்குச்சென்று, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில், குற்றியலுகரம் உயிரீறே யென்று நிறுவினேன். அதன் பின்னர், தமிழ் நாடு முழுமைக்கும் பயன்படுமாறு ஒரு கட்டுரையும் வரைந்தேன்.

ஏறத்தாழக் கால் நூற்றாண்டிற்குப் பின், இன்று புலவர் முதுகுன்றனார் மாணவர் முதுக்குன்றுமாறு ஒரு கட்டுரை வரைந்துள்ளார். அதற்கு மறுப்பே தேவையில்லை. ஆயினும், இந்நாள் மாணவர் மயங்கற்கிடமாயிருத்தலானும், இத்தகைய இலக்கணச் செய்திகளை வரையறுத்துக்கூறும் மதுகை தலைமைப் பதவித் தமிழ்ப் பேராசிரியர்க்கும் இன்மையானும், “ தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பெருஞ்சண்டன்,” என்றுதலானும், இம்மறுப்பை எழுதத் துணிந்தேன். தமிழ் ஆசிரியர், சிறப்பாகப் புலவர் கல்லூரி மாணவர், அனைவரும் இதை ஊன்றி நோக்கி உண்மை தெளிக.

க. “ தொல்காப்பியர் கூறும் குற்றியலுகரத்துக்கும், நன்னூலார் கூறும் குற்றியலுகரத்துக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. குற்றியலுகரத்தின் தன்மை பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்துகள் இயற்கையோடு இயைந்தனவாக இருக்க, நன்னூலார் கூறும் கருத்துகளோ இயற்கையோடு பொருந்தாதனவாய் இருக்கின்றன,”

தொல்காப்பியர் கூறும் குற்றியலுகரத்திற்கும் நன்னூலார் கூறும் கூறும் குற்றியலுகரத்திற்கும், பெரிதும் வேறுபாடில்லை. ''உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்,'' (164) என்று நன்னூலார் கூறியதே வேறுபட்டதும் வழுவுற்றதுமாகும். உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடாது; அதற்கு (உயிருக்கு) இடந்தந்து உள்ளேயே அல்லது உடனேயே நிற்கும்; பேய் கோட்பட்டான் அல்லது தெய்வமேறினன் உயிர் முன்போல் உடனேயே நிற்பது போல்.

தொல்காப்பியர் குற்றியலுகரம் சொன்முதலிலும் வரும் என்று கூறிய கூற்றுத்தான், இயற்கைக்கும் உண்மைக்கும் முற்றும் மாறுகும். நன்னூலார் அங்ஙனம் கூறியிலர்.

''குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.''

என்பது தொல்காப்பியம் (எழுத். 67).

சொன்முதலில் வரும் உகரத்தை, குறுக்கியோ இதழ் குவியாதோ ஒலிக்கும் வழக்கம் தமிழருக்கு ஒருகாலத்தும் இல்லை. குற்றியலுகரத்தின் இயல்புகள் ஒலித்திரிபு ஒலிக்குறுக்கம் என இரண்டாகும். இவற்றுள் ஒலித்திரிபே மிக்கதாம் இதுபற்றிக் குற்றியலுகரத்திற்குச் ''சாயும் உகரம்'' (நன் (107) என்று நன்னூலார் பெயரிட்டது மிகப் பாராட்டத் தக்கதாகும். இகரத்திற்கும் உகரத்திற்கும் இடைப்பட்டதே குற்றியலுகரம் அல்லது சாயுமுகரம். அதன் அளபு துல்லியமாய் அரையென்பது பொருந்தாது. ஆயினும், குறுக்கங்களையெல்லாம் செம்பாகமாய்க்கொள்ளும் மரபு பற்றி, முற்றுகரத்திற் சரிபாதி குற்றுகரம் எனக் கொள்ளப் பெறும். உண்மையில் அஃது அரையளபினும் சற்றுக் கூடியதாகும்.

நுந்தை யென்பதின் மறுவடிவான உந்தை யென்னுஞ் சொல்லோ; உகப்பு, உங்கு, உச்சி, உஞ்சல், உணவு, உதவி உப்பு, உம்பர், உயரம், உலக்கை, உவமை, உழவு, உள்ளம், உறவு, உன்னு முதலிய பிற உகர முதற் சொற்களோ; நுகர், நுங்கு, நுசுப்பு, நுடங்கு, நுணு, நுதல், நும்பி, நுரை, நுவல், நுழை, நுள்ளான், நுறுங்கு, நுனி முதலிய பிற நுகரமுதற்சொற்களோ எல்லாம் முதலெழுத்து முற்றுகரமாயொலிக்கும்பொழுது, நுந்தை யென்னும் சொன்முதல் மட்டும் எங்ஙனம் குற்றுகரமாயொலிக்கும்? அங்ஙனம் ஒலிப்பார் இன்றொருவரும் இல்லையே! ஒருகால் அவர்காலத்து ஆசிரியர் சிலர் அங்ஙனம் திரித்தொலித்தார் போலும்! தமிழர் அங்ஙனம் ஒலியாமை கண்டே அவரும்,

"முற்றிய லுகரமொடு பொருள் வேறு படாஅ
தப்பெயர் மருங்கின் நிலையிய லான."

என்று (எழுத். 68) அதற்கு விலக்குங் கூறியுள்ளார்.

இந்நூற்பாவிற்கு,

"காது. கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமுங் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற்போல, நுந்தையென்று, இதழ் குவித்து முற்றக் கூறிய விடத்தும் இதழ் குவியாமற் குறையக் கூறிய விடத்தும் ஒரு பொருளே தந்த வாறு காண்க. நுந்தா யென்பதோவெனின், அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயலென்றத னான், இடமும் பற்றுக் கோடும் இரண்டிற்கும் வேறுபாடின்றென்று கொள்க. இதனானே மொழிக்கு முதலா மெழுத்துத் தொண்ணூற்று நான்கென்று உணர்க," என்பது நச்சினார்க்கினியர் விளக்கவுரை. இளம்பூரணர் கருத்தும் இதே.

காது, கட்டு, கத்து முதலியன ஏவல் வினையும் தொழிற் பெயருமாய்ப் பொருள் வேறுபடுவது. முற்றுகர குற்றுகர வேறு பாட்டினாலன்று; ஒலியழுத்த (Accent) இடவேறுபாட்டினா லேயே ஏவல் வினையாய் நிற்கும் பொழுது ஈற்றசையிலும், தொழிற்பெயராய் நிற்கும் பொழுது முதலசையிலும், ஒலியழுத்தம் விழும், 'இதைக் கட்டு' என்று ஏவல் வினையாய் ஆளும் பொழுது டுகரத்தின் மேலும், 'கட்டுக் கட்டாய்க் கட்டினான்' என்று வினைப்பெயராய் ஆளும் பொழுது ககரத்தின் மேலும், ஒலியழுத்தம் விழும். ஒலியழுத்தத்தினால் குற்றியலுகரம் இதழ் குவிந்தொலிக்கும் முற்றுகரமாகிவிடாது. இதை ஒலித்துக் காண்க.

"நுந்தாய் என்பதோவெனின், அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று.' என்பது, நுந்தை என்ப தும் அத்தகையதே யென்னும் கொள்கைக்கு ஒருவாறு துணைபுரி தல் காண்க.

நன்னூலார் குற்றியலுகர வியல்பைத் தொல்காப்பியரி னும் நன்குணர்ந்தவராதலின், அதை மொழி முதலெழுத்துக் களுள் ஒன்றாகக் கொண்டிலர்.

நன்னூலுரையாசிரியர் மயிலைநாதர், "குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின் ஒற்றிய நகரமிசை நகரமொடு முத லும்." என, ஆசிரியர் தொல்காப்பினார் இவ்வாறு குற்றிய லுகரம் மொழிக்கு முதலாமென்றாராலோ வெனின்,

"நுந்தை யுகரங் குறுகி மொழி முதற்கண்
வந்த தெனினுயிர்மெய் யாமனைத்தும்—சந்திக்
குயிர்முதலா வந்தணையும் மெய்ப்புணர்ச்சி யின்றி
மயலணையும் என்றதனை மாற்று,"

இவற்றை விரித்துரைத்து விதியும் விலக்கும் அறிந்துகொள்க." என்று உரைத்திருத்தலை நன்கு ஆய்ந்து தெளிக.

உ "நன்னூலார் மட்டுமல்லர், குற்றியலுகரம் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களுக்கு உரைகண்ட இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் ஓரளவுக்குத் தொல்காப்பியர் கருத்தை நன்கு விளக்கினும், பெருமளவுக்கு உண்மைக்குப் பொருந்தா உரைகளே கூறினர்."

நன்னூலார் கூற்றுகள், ஒன்று தவிர ஏனைய வெல்லாம் உண்மைக்குப் பொருந்தியவை யென்பது மேற்கூறப்பெற்றது. இனியும் கூறப்பெறும்

பெரு என்னும் குறிப்புப் பெயரெச்சம் வல்லின மெய்ம் முதலொடு புணரும் பொழுதே, பெருங்கதை, பெருஞ்சோறு. பெருந்தலை, பெரும்பானை என மகரவொற்று மிகும்; உயிரொடு புணரின், பேரளவு, பேராவல், பேரீந்து, பேரூர் என அடி நீண்டே புணரும்.

பெருமை அளவு எனப் பண்புப் பெயரை நிலைச்சொல் லாக நிறுத்திப் புணர்ப்பதும் தவறென்பதை, என் 'மொழித் திறத்தின் முட்டறுப்பது மொழி நூலே,' என்னும் கட்டுரையிற் காண்க.

௩. "குற்றியலுகரம் தனிமொழி இறுதியில் நிற்கும்போது அரைமாத்திரை பெறும் என்பதும், அது மெய்யீறு போலப் புள்ளி பெற்றும் வருமொழி உயிரேற இடங்கொடுத்தும் நிற்கும் என்பதும், அரைமாத்திரை அளவுள்ள குற்றுகரம் இயல்பானதே என்பதும், இடமும் பற்றுக் கோடும் காரணமாக ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி அரை மாத்திரையாக வீகாரப்பட்டு நின்றது அன்று என்பதும், அஃது உயிரீறுமன்று, மெய்யீறுமன்று, அவ்விரண்டின் வேறுபட்டதான சார்பீறு என் பதும், தனிமொழி இறுதியில் அரைமாத்திரை பெற்று நிற்கும் குற் றுகரம் தொடர்மொழி இடைப்படும்போது ஒரு மாத்திரை பெறு கின்ற முற்றியலுகரமாக மாறிவிடும் என்பதும், ஆனால் விதி விலக்காக வருமொழி முதலில் உயிர் வரும் போது நிலைமொழி இறுதியில் நின்ற ஆறுதொடர்க்குற்றியலுகரமும், வருமொழி முதலில் வன்கணம் வருகின்றபோது நிலைமொழி இறுதியில் நின்ற

வன்றொடர்க் குற்றியலுகரமும் மட்டும் அரை மாத்திரை பெறும் முற்றுகரமாகவே நிற்கும்'' என்பதும் தொல்காப்பியர் கருத்துக் களாகும்.''

இவற்றுட் பல தொல்காப்பியர் கருத்துகளல்ல; புலவர் முதுகுன்றனாருடையனவே. குற்றியலுகரமும், குற்றியலிகர மும் குறுகியொலிப் பவை யென்று காட்டுதற்கு அவற்றின் மேற் புள்ளியிடும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்தி ருக்கின்றது. இதைத் தொல்காப்பியர்,

"அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்." (எழுத். 104)

என்று நெறியிட்டபின்,

"குற்றிய லுகரமும் அற்றென மொழிப்." (எழுத். 105)

என்றி மாட்டெறிந்ததினாலும், நூற்றொடக்கத்திலேயே,

"அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன," (எழுத். 2)

என்று சார்பெழுத்து மூன்றையும் "முப்பாற் புள்ளி" யெனத் தொகுத்துப் பொதுப்படக் கூறியதனாலும், அறியப்படும்.

"முற்கூறிய இரண்டும் உம்மை தொக்கு நின்றன" என்று நச்சினார்க்கினியரும், "குற்றியலிகரமும் குற்றிய லுகர மும் என்னும் எண்ணும்மை விகாரத்தால் தொக்கன என்று இளம்பூரணரும் உரைத்திருப்பது பொருந்தாது, உம்மை விரிந்து நிற்பினும் ஆசிரிய யாப்பு வழுவாமையானும், விரிந்து நிற்பதே இன்னோசை பயத்தலானும், அவை உரையல்லவென அறிக உரையாயின், தொல்காப்பியம் முன்னொடு பின் முரண் படுதல் காண்க.

"தொல்லை வடிவின எல்லா வெழுத்துமாண்
டெய்தும் எகர ஒகரமெய்ப் புள்ளி." (நன். எழுத். 43)

என்னும் நூற்பாவுரையில். "ஆண்டு என்ற மிகையானே. தாது, ஏது என்றற்றொடக்கத்து ஆரிய மொழிகளும். எட்டு. கொட்டு என்றற் றொடக்கத்துப் பொது மொழிகளும், குன்றி யாது, நாடியாது, எட்டியாண்டுளது என்றற் றொடக்கத்துப் புணர்மொழிப் பொருள் வேறுபாடுகளும் அறிதற் பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உள ரெனக் கொள்க." என்று மயிலைநாதர் அவர்காலத்தும் ஒரு சாரரிடை அவ்வழக்கமிருந்ததாகக் கூறியிருப்பதும் காண்க.

இனி. பழஞ்சேரநாடான மலையாள நாட்டின் தென்பாகத்தார், குற்றியலுகரத்தின் மேற்புள்ளியிட்டு எழுதி வருவதும் இங்குக் கவனிக்கத் தக்கது.

இதனால், குற்றியலுகரம் புள்ளி பெறுமென்பதல்லது மெய்யீறென்பது பெறப்படாது. பெறப்படின், எகர ஒகர உயிர்களும் மெய்யெழுத்தென்றாகும்.

" மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் "
(தொல். எழுத். 15)

" எகர ஒகரத் தியற்கையும் அற்றே " (ஷை ஷை 16)

என்று தொல்காப்பியர் கூறுதல் காண்க.

குற்றியலுகரம் குறுகியும் சாய்ந்தும் ஒலித்தலினாலேயே, வருஞ்சொன் முதலுயிரேற இடங் கொடுக்கும்; அதன் மெய்த் தன்மையினாலன்று. குற்றியலுகரம் இருக்கும் எழுத்து உயிர் மெய்யாதலின், அது உயிரீறென்பதை உணர்த்தற்கே.

" குற்றிய லுகரமும் அற்றென மொழிப "
(எழுத் 105)

என மாட்டெறிந்த பின்,

" உயிர்மெய் யீறும் உயிரீற்றியற்றே. "
(எழுத். 106)

என அதையடுத்தே கூறினார் தொல்காப்பியர்.

குற்றிய லுகரமெல்லாம் திரிபெழுத்தே. அதனாலேயே அதனைச் சார்பெழுத்தென்றார் தொல்காப்பியர். சார்பென்பது பற்றுக்கோடே. அது நிகழ்வது சொல்லிறுதியிலேயே ஆதலால், இடமும் பற்றுக் கோடும் துணைக்கொண்டே குற்றியலுகரம் தோன்றும். அது தோன்றுமிடத்து முற்றியலுகரம் தோன்றாது. நெடுங்கணக்கில் உகரமே யன்றிக் குற்றியலுகரமில்லை. உகரஞ் சேர்ந்து கு, சு, டு, து, பு, று, எனத் தனி யுயிர்மெய்கள் தோன்றுவது போல், குற்றியலுகரஞ் சேர்ந்து ஒரு தனியுயிர் மெய்யுந் தோன்றாது. சொன் முதலிடையிலும், மெல்லின இடையின மெய்யூர்ந்தும் குற்றியலுகரம் தோன்றாது. ஆதலால், குற்றியலுகரம் இயல்பென்பது, நேர்நின்று காக்கை வெளிதென்பார் கூற்றே. அதற்குக் கட்கோளாறு அல்லது உட்கோளாறே கரணியமாகும்.

குற்றியலுகரத்தை நெடுங் கணக்கிற் சேர்த்துள்ள வடமொழியும், அதனை ரகர லகர மெய்களோடு சேர்த்தே ரு, லு, என வழங்குகின்றது. குற்றியலுகரம் வட மொழியிலில்லையென்று, பெரும்புலவர் வேங்கடராசுலு அவர்கள் தம் ' இலக்

கணக் கட்டுரைகள்' என்னும் நூலிற் கூறியிருப்பது பொருந்தாது. வடமொழி பிற்காலத் திரிமொழியாதலின், சொல்லிடை நிகழும் அசையினைச் செயற்கை முறையிற் பிரித்தெடுத்து, தனியெழுத்துகள் போற்காட்டி வருகின்றனர். அம், அ: என்பன வற்றிற்கும் ஈதொக்கும். ரு என்னும் நெடிலைக் குற்றுகர நீட்டமெனக் கொள்ளாது, சாயுமுகர நீட்டமெனக் கொள்ளல் வேண்டும்

குற்றுகரம் தனிமொழி யிறுதியிற்போன்றே புணர்மொழியிடையும், குற்றுகரமாகவே நிற்கும். அதாவது, அரையளபாய்க் குறுகியும் இதழ் குவியாதும் ஒலிக்கும். அது புணர்மொழியிடை முற்றுகரமாய் மாறிவிடுமென்பது, குறளன் இருவரிடை நிற்பின் அளவனாய் விடுவான் என்பது போன்றதே. குற்றியலுகர இயல்பிற்கு எவ்வகையிலும் நெறியீட்டு விலக்கேயில்லை. வருஞ்சொன் முதலில் எவ்வெழுத்து வரினும், அதன் குற்றியலுகரத் தன்மை மாறாது. வலிமுதற் சொல் வருஞ்சொல்லாய் வரினோ, குற்றியலுகரம் மேலும் குன்றிக் கால் அளபாய் ஒலித்து நிற்கும். இது புலவர் முதுகுன்றனார் கொள்கைக்கு நேர்மாறும்.

– (தொடரும்)

தமிழ்நாட்டுத் தாளிகைகளின் நேர்மையின்மை.

தென்மொழி மீது வழக்குத் தொடங்கப்பெற்ற செய்தியையும், பின்பு வழக்கின் முடிவினையும் தமிழகத்தின் தலையாய நாளிதழ்கட்கும் சில கிழமை இதழ்கட்கும் விடுத்தோம். முன்னைய செய்தி எவ்விதழிலும் வரவில்லை. வழக்கு முடிவோ, முரசொலி, நம்நாடு, இந்து. 'எக்சுபிரசு' மெயில். அறிவுப்பாதை, "குறள் நெறி" இவற்றில் மட்டுமே வெளி வந்துள்ளது. தமிழ்நாடு, தினத்தந்தி, மாலைமுரசு, நவமணி, தினமணி, நவ இந்தியா, சுதேசமித்திரன், ஆகிய இதழ்கள் செய்தியை வெளியிடவில்லை. இத்தாளிகைகளின் நேர்மையும் கண்ணியமும் என்னே! தென்மொழி, தன் நேரிய கொள்கையால் இவ்விதழ்கள் செய்யும் பிழைகளையும் தீங்குகளையும் அவ்வப்பொழுது இடித்துக் காட்டிக் கடிவதனால் ஏற்பட்ட கசப்பும் காழ்ப்புமே காரணம் என்பதன்றி வேறென்ன கூறவியலும்? கருத்து மாறுபாடு வேறு, பொதுவான தாளிகையறம் வேறு என இவை உணர்ந்தில போலும்! பொதுவாக இலையேனும், சிறப்பாகத் தம் போலும் தாளாசிரியர் மேல் பாதுகாப்புச் சட்டம் பாய்ந்துள்ளதே என்ற முறையிலாவது செய்தியை வெளியிடாத இத்தாளிகைகளின் புன்மைக்கு நாணுகின்றோம்!

(— உ...ர்)

தாய் மொழி !

— மு. மகிழரசன்.

இவ்வுலகில் இருக்கின்ற பெண்டிர் எல்லாம்
எனைப்பெற்ற தெய்வத்தாய் அனையர் என்பேன்;
இவ்வுரையில் எள்ளளவும் ஐயம் இல்லை;
இருகையால் தொழுதற்கும் உரியர்; ஆனால்,
எவ்வயிற்றில் பிறந்தேனோ, பத்துத் திங்கள்
எவ்வயிற்றில் பிறந்தேனோ எனைச்சுமந்த
அவ்வயிற்றுக் குரியவளே என்தா யாவாள்
ஆரிதற்கு மறுப்புரைத்தல் ஆகும் இங்கே?

இம்மண்ணில் வழங்குகின்ற மொழிகள் எல்லாம்
இயம்புகின்றேன் மொழிகளென்றே! இதிலும் ஐயம்
இம்மியள வதுமில்லை எனின் அவற்றுள்;
எம்மொழியும் நான்கற்க லான போழ்தும்
எம்மொழிஎன் குருதிகலந், தியற்கை யாக
என்றென்றும் நாவிலெழும்; பிறப்புத் தொட்டே
அம்மொழிஎன் பிறப்புரிமை! அமிழ்தை வெல்லும்!
அதுதான்என் தாய்மொழியே! மறுப்பார் ஆரே?

இவ்வுலகில் ஊர், நாடு நகரம் கோடி!
எழில்விளங்க அமைந்திருக்கும் இருந்தி டட்டும்!
அவ்வனைத்தும் மண்ணீர்த்தென் றறிவேன், யாதும்
ஊரென்பேன். உலகேஓர் ஊர்தான்; ஆனால்
எவ்வயின்நான் பிறந்துயர்ந்தேன் அதுதான் என்றன்
எழில்மிக்க தாயகங்காண்! அங்குக் கற்ற
அவ்வினிய மொழிக்குரிய அந்த நாடென்
அனையவர்க்குப் பொதுவாம்தாய் நாடே என்பேன்.

என்தாய்க்கு வந்ததுவோர் இன்னல் என்றால்
எப்படிநான் சிரித்திருப்பேன்? எனக்கே இன்னல்!
என்தாயின் பொன்மொழிக்குத் தீங்கு செய்வோன்
எவனாக இருந்தாலும் என்பகைஞன்.
என்தாய்நல் தமிழுக்குத் துன்பம் என்றால்
என்தாய்க்குத் தாயகத்துக் கெனக்குந் துன்பம்.
என்தாய்நேர் தாய்மொழிக்கும் தாய் நாட் டுக்கும்
என்னுயிரால் நலம் என்றால் எனக்கே இன்பம்!

— ● * ● —

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய் பேசாது பாகித்தானின் படையெடுப்புப் பற்றியே வாய் ஓயாது வடவரினும் மிகுதியாகப் பேசிக்கொண் ருக்க, இந்திய அரசோ, ஒரு கையால் பாகித்தானுக்கு எதிரகக் கத்தியைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் இந்தியைத் தமிழகமெங் கணும் தன் முன்னைய திட்டத்தில் சிறிதுகூட மாற்றமில்லாமல் தூவிக்கொண்டல்லவா வருகின்றது? நாம் வாய் மூடியிருப் பது அவர்கட்கு நல்ல வாய்(திற)ப்பாகப் போய்விட்டதே! இதைத் தட்டிக் கேட்க யார் இருக்கின்றனர்? தமிழர் தலைவர் கள் உண்மையானவர்களானல், "ஐயா, நடுவண் அரசினரே பாக்கித்தானின் படையெடுப்புக்கு நாங்களும் வருந்துகின் றோம், நாங்களும் முழு மூச்சோடு உங்கட்குத் துணை நிற் போம். இந்நெருக்கடி காரணமாக நமக்குள்ளிருக்கும் மொழிச் சிக்கலை இன்னும் சில காலத்துக்குத் தள்ளி வைப்போம். அது வரை முன்பிருந்த நிலையே (ஆங்கிலமே பொது மொழியாக) நீடிக்கட்டும். அதுவரை நீங்கள் எங்கள் மேல் இந்தி மொழி யைத் திணிக்க முயலாதீர்கள்; அப்படித் திணிப்பீராயின் அதனை நாங்கள் எதிர்த்துத் தீரவேண்டிய கட்டாய நிலை ஏற் படும்; அந்நிலை நெருக்கடிக்காலத்தில் வேண்டத் தகாததாகும்; ஆதலின் அதற்குரிய சூழலை நீங்கள் உருவாக்காமல் இருங் கள்" என்று அவர்கட்கல்லவா கண்டிப்பாகக் கூறியிருத்தல் வேண்டும்! அப்படியின்றி, மொழிபற்றிய நினைவையே காற் றில் பறக்க விட்டு விட்டு வடவர்கள் என்ன சொன்னாலும் (தன் னலத்தால் சொல்கின்றனர் என்பதறியாமல்) ஆம் ஆம் என்று தலையாட்டிக்கொண்டு, அவர்கள் "எள்" என்னு முன்பே எண் ணெயாக நின்று அவர்களே வியக்கும்படியாக அவர்களினும் பன்மடங்கு போர் முயற்சியில் ஆர்வங் காட்டிக் கொண்டிருப் பது முழுக்க முழுக்க அடிமைத் தன்மையன்றி நாம் நினைப்பது போல் துளியேனும் பெருந்தன்மை ஆகுமா? நம் தமிழகத் தலைவர்களின் முதுகெலும்பின்மையை எண்ணிப் பெருமூச்சு விடவேண்டியவர்களாகின்றோம்! அந்தோ! தமிழகமே, இது தானா உன் நிலை?

இந்நிலையில்தான் ஆசிரியர் பெருஞ்சித்திரன் சிறை சென்றுள்ளார். ஆயினும் என்ன, ஆயிரம் அடக்குமுறை வரி னும் அவர்தம் அரிமா முழக்கம் அடங்காது! தமிழக விடுதலை யுணர்வு கொப்பளிக்கும் அவர்தம் உண்மைத் தமிழ் நெஞ்சம் இந்தச் சிற்றிடர்ப்பாடுகட் கெல்லாம் அசைந்து தன்னிலை திரிந்துவிடாது. இன்று வேண்டுவது ஒன்றுதான்: அவர்தம் பணிக்குத் துணை! உண்மையாளர்களின் துணை! அவர் வேலை களைத் தொடர்ந்து நிறைவேற்றத் தமிழ் வீறு கெடாத ஆயிர மாயிரம் இளைஞர் உள்ளங்கள் தேவை. தனித்தமிழ் உணர்விற்

கால்கொண்டு, உயிர் மூச்சிருக்கும் வரை கொண்ட கொள்கை களை நிறைவேற்றியே தீருவோம் என்று சூளுரைக்கும் புலிக் குருளைகள் தேவை. அடிக்கும் காற்றுக்குச் சாயாமல், நெருக் கும் இடுக்கிக்கு நெகிழாமல், வளையா ஈட்டியாகத் தம்கொள்கை யைத் தாங்கும் மறவர்கள் தேவை தென்மொழி நான்காண்டு களாக ஊட்டி வந்திருக்கும் உணர்வு அத்தகைய மறவர்களைத் தமிழகத்துக்கு ஆக்கித்தரும் என்று நம்புகின்றோம் அந்த நம் பிக்கையே சிறையில் இருக்கும் ஆசிரியர்க்குத் தெம்பூட்டுவ தாகும்.

— த.

அச்சத்தின் அடையாளம் !

"எங்கள் கருத்துக்கு மாறுபட்டால் சிறை!" என்று அரசினர் அச்சுறுத்துவதால் நாட்டிற்குத் தேவையான சிறப் பாற்றல்கள் அமிழ்த்தப்பட்டு விடுகின்றன. கருத்து வேறுபடு வதை நாட்டுப் பற்றின்மை என்றும். தீ நெறி என்றும் இவர் கள் சொன்னால் உலகம் நம்பி விடுமா? மக்கள் உணர்வை மதிக்காமல் நடந்த வல்லாட்சியாளரை இதே பெயர்வழிகள் எதிர்த்துப் போராடி நெடுநாட்கள் ஆகிவிடவில்லையே! இப் பொழுது மட்டும் இவர்கள் தங்கள் கருத்தை மக்கள் மேல் திணிக்கவும், எதிர்ப்பவர் வாய்க்குப் பூட்டிடவும் நினைப்பதை என்னென்பது! கருத்தைக் கடிபவனைப் பகைவன் என்று முத் திரை குத்துவது சிறுபிள்ளைத்தனம். இந்தியாவின் விடுதலை நிலைக்க வேண்டின் வெளியுலக நட்புறவு போன்றே அக ஒற்றுமையும் தேவை. மக்கள் மனச்சான்றினைப் பூட்டிவைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிடுவதால் இவ்விரண்டை யுமே இழக்க நேரும். சிறைகளையும் கட்டுக் காவலையும் மிகுதிப் படுத்துவதால் ஒருமணி கூலந்தானும் மிகுதியாக விளையுமா? நம் தலைவர்கள் அறிய வேண்டுவது இதுதான். தன்னம்பிக் கைக்கும், அஞ்சாமைக்கும் அடையாளம் விரிந்த உள்ளமும் பரந்த நோக்கமுமாகும். வன்னெஞ்சமும், வல்லாட்சியும் அச்சத்தின் அடையாளமே!

— இமாத்து (HIMMAT) ஆங்கில மொழிக்கிழமை இதழில்
இராசமோகன் காந்தி (3-12-65).

வேலூர்ப் பெருஞ் சிறையில்
ஆசிரியர்
பெருஞ்சித்திரன்
இன்று
முப்பதாம் நாள் !

சிறை வாழ்வு தந்தார் !

— ம. இலெ தங்கப்பா.

பொதுநலத்துப் போர்வையினால் தன்னலத்தை மூடிப்
 பொருள் சுரண்டும் புல்லியர்க்கு நல்லுரிமை தந்தார்;
மதுவருந்திக் கணிகையொடு கூத்தாடிக் கூடி
 மாண்பழிந்த கயவர்க்குக் கலை விருது தந்தார்;
அதிர்கொடுமை உறக்கண்டும் வாய்திறக்க அஞ்சி
 அடங்குகின்ற கோழைகட்கு நெடும்பதவி தந்தார்;
எதுவரினும் நிலைகுலையா அற நெஞ்சால், ஆட்சி
 இடித்துரைத்த சான்றோர்க்கோ சிறை வாழ்வு தந்தார்!

விளைபொருட்கள் பதுக்கி வைத்தே ஒன்றுக்குப் பத்தாய்
 விலைபோக்கும் கொள்ளையர்க்குத் துணைதாமே நின்றார்:
வளமனையிற் பகட்டுறவே வாழ்ந்துபல கோடி
 வரி ஏய்க்கும் திருடர்க்குப் பரிவளித்துக் காத்தார்;
கலைபோலுந் திரைப்படத்தால் தீமைகளை வித்திக்
 காசுவிளை கடைஞர்க்கும் காப்பாக நின்றார் !
துளி நேர்மை பிறழாமல் பொது நன்மை பேணும்
 தூயபெருந் தொண்டர்க்கோ சிறை வாழ்வு தந்தார் !

வழுக்கலுறு புல்லியர்கள் விலைமகளிர் வாழ்வை
 வகை வகையாய் வடிப்பவரைத் திரிகவென விட்டார்;
இழுக்குறவே பெண்ணுருவை ஆடையின்றித் தீட்டி
 இதழ்விற்கும் இழிஞர்தமைக் கடிவதுவும் கெட்டார்;
அழுக்குநிறை கதை பலவால் மக்கள் உளம் தீய்க்கும்
 அருவருப்புத் தாளினரைக் கருவறுக்க மாட்டார்;
ஒழுக்கமுயர் நல்லுரையால் பண்பு, நெறி ஓம்பும்
 உண்மையிதழ்ப் பணிஞரையோ கடுஞ்சிறையிற் போட்டார்!

அரசினரைப் பாராட்டிப் புல்லிய பா யாக்கும்
 அரைகுறைகள் பல்லிளிக்கப் பரிசு பல தந்தார்.
நரிமனத்தின் இழிவுணர்வு புதுமை எனப் பாடும்
 நாள்மாறிப் பெயர்வழிகட் காள் மதிப்புச் செய்தார்!
வரைவின்றி, வாய்மையின்றிப் பொய் புணர்க்கும் நூலால்
 வாணிகஞ்செய் புலவர்தமைப் பேணி உயர் வீந்தார்!
புரையின்றி மெய் நூல்கள் படைத்துண்மை நாட்டும்
 புயல்நிகர் மெய்ப் புலவர்க்கோ சிறை வாழ்வு தந்தார் !

தென்மொழி வழக்கு முடிவினை வெளியிட்ட தாள்களின் வரிசையில் (27 ஆம் பக்கம்) கடலூர் “ தினக்கதி ”ரையும் சேர்த்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

— அமைச்சர்.

" பாரதநா டெம்"தென்று வலிந்தடிமை தாங்கும்
பண்பழிந்த தமிழ்ப் பதரை நண்பரெனக் கொண்டார்;
ஆரியத்தால் இந்தியினல் தமிழ் நலத்தைத் தீய்க்கும்
அடுவிரகர் தமையழைத்துக் கொடை வழங்கி நின்ருர்;
நேர்மையிலா ஆட்சிக்குக் கட்டியங்கள் கூறி
நெடுங் கொடிகள் தூக்குவரை உடன் இருத்திக் கொண்டார்!

சீருயர் மெய்த் தமிழ் விதைத்துப் பொதுவுலகம் வேண்டும்
செம்மாந்த நெஞ்சரையோ சிறை யெடுத்துச் சென்ருர்!

இரவெல்லாம் கிழத்தியர்பால் போக்கி, அறம் கூற
எழுந்துவரும் மடத்தலைவர் தமை வணங்கி வீழ்ந்தார்;
கரவெல்லாம் வெண் பூச்சால் மறைத்துப் பொன் வவ்வும்
கடுங்கோவிற் பூனைகளை அறங்காக்க வைத்தார்!
மருள் நின்ற மதவெறியில் மக்கள் தமைத் தூண்டி
மறம் விளைக்குந் தீயவரை அறம் உரைத்துக் காத்தார்!
அருள் நின்ற தூய்நெஞ்சால் இறையுணர்வில் ஓங்கும்
அறஞ்சார் மெய் யுணர்வினரைக் கடுஞ்சிறையில் வைத்தார்!

வடமொழிக்குத் தமிழ் தாழ்ந்த தென்னும்பொய் யர்க்கும்,
வால்பிடிக்கும் அடிமைகட்கும் மேற்பதவி தந்தார்;
இடை நுழைந்த கலவைச் சொல் அத்தனையுந் தமிழ்ல்
இயற்கைஎனுங் கீழ்மகர்க்குப் பொற்கிழிகள் ஈந்தார்.
நடை முழுதும் கொச்சை, வழு, இழிவழக்குத் தோய்த்தே
நாற்றமுற எழுதுபவர்க் கேற்றமிகச் செய்தார்.
தடைவரினும் அடலெதிர்ந்து பீடு தமிழ் காக்கும்
தனித்தமிழ் மெய் அன்பர்க்கோ சிறை வாழ்வு தந்தார்!

அறிவில்லா வெற்றுணர்வால் ஆர்ப்பரித்து, வீணில்
அரசியலைக் குழப்புவர்க்கு வரிசை யளிக்கின்ருர்!
செறிவில்லாக் கொள்கையினல் நாட்டின் நலம் தீய்த்துச்
சீரழிக்கும் பூரியர்க்குப் பாராட்டுத் தந்தார்!
முறையில்லா வினைப்பாட்டால் கொலை கொள்ளை செய்யும்
முரடர்க்கும் மூடர்க்கும் அதிகாரம் தந்தார்.
திறனில்லா ஆட்சியினை இடித்துரைத்துத் திருத்தும்
தெளிவு நிறை அறிஞர்க்கோ சிறைவாழ்வு தந்தார்!

தென்மொழி படிப்போர் ஒவ்வொருவரும்
அச்சக அமைப்புக்கு ஒவ்வோர் உருபா
அனுப்பி வையுங்கள்!

— 5 ஆந் தொடர்.

வள்ளுவனுர் பாஸ் முறை

புலவ, வித்துவ, ஒண். கி. சந்திரசேகரன்

எம் .ஏ., பி. டி., பி. ஓ. எல்.

செயற்பாலதோரும் அறனே யொருவற் (கு)
உயற்பாலதோரும் பழி; (4. அறன் வலியுறுத்தல்: 10)

இதனல் செய்வன செய்து ஒழிவன வொழிக வென்றறி வுறுத்தப்பட்டது. இத்திறப்பாட்டான் கூறிய குறட்பாக்கள் மிகவும் திட்ப முடையனவாய் நூலகத்து ஆங்காங்கு அறியக் கிடக்கின்றன.

(அ) அறத்துப்பாலில்,

ஒருவன் முன் செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று; அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப் பது அறன் என்பார்

''நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று'' (11. செய்ந்நன்றியறிதல் . 8)

என்ருர். இவ்வாறு வருவன பிறவுமுள.

(ஆ) பொருட்பாலில்,

''செய்தக்கவல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமையானுங் கெடும்
(47 : தெரிந்து செயல்வகை : 6)

என்றதனகண், செய்வன செய்து ஒழிவன வொழிகவென இரு வகையனவுமுடன் கூறப்பட்டன

மேலும், நல்லது கூறுங்கால் தீயதும் உடன் வைத்து மொழிவதற்கெல்லாம் இக்குறளே கருவியாயிற்றென்க :

அறத்துப்பாலில் :
''நல்லா றெனினுங் கொளல் தீது, மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று (23. ஈகை : 2)

''வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசை யொழிய
வாழ்வாரே வாழாதவர்'' (24. புகழ் : 10)

'' சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் ''

(20. பயனில சொல்லாமை : 50).

பொருட்பாலில்,

"உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ; கொள்ளற்க
அல்லற்க ணாற்றறுப்பார் நட்பு" (80. நட்பாராய்தல் : 8)

எனத் தம்மின் வலியாரொடு தொடங்கியனவும் பயனில்லவு மாகிய வினைகளை நினையா தொழிக; அதுபோலத் தமக்கு ஒரு துன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளா தொழிக வென முற்றக் கடிதற்குரியவற்றைக் கூறுதலும் கொள்ளப்படும்.

"மருவுக மாசற்றார் கேண்மை யொன்றீத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு" (81. பழமை : 10)

என்றதன்கண், உலகத்தோடொத்துக் குற்றமற்றார் நட்பினையே பயில்க; உலகொடு ஒத்தலில்லார் நட்பினை யறியாது கொண்டாராயின் அவர் வேண்டிய தொன்றனைக் கொடுத்தாயினும் விடுகவென்று கோடற்கும் கடிதற்கு முரியவற்றையுடன் வைத்து மொழிந்தார்.

"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு"
(11. செய்ந்நன்றியறிதல் : 6)

என்பதும் ஈண்டே இடம் பெறுமாறறியப்படும்.

இவற்றான், அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்துட் கூறிய பத்துச் செய்யுட்கள் முப்பாலில் ஆங்காங்கு கிளக்கப் படும் பொருட்டிறங்களுக்குப் பொதுவாய் நின்று பயன்படுமாறு கண்டாம். மேலும், ஓரதிகாரத்துக்கண் நுவலப் புகுந்த கருத்துகளை யெவ்வெவ்வாறு பகுத்தோதுதல் அமையு மென்பதனை இவ்வதிகார வமைப்பே யொரு கட்டளைக் கல் போலக் காட்டுவதாகும். யாங்ஙனமெனின் :

(அ) "சிறப்பீனும் செல்வமுமீனு மென்றதனான் அறத்தினது தலைமையும்,

(ஆ) ஆக்கம் எவனோ வுயிர்க்கு என்றதனான், இம்மைப் பயன் மறுமைப் பயன், இருமைப் பயன்களும்.

(இ) "அறத்தினூங்காக்கமில்லை" என்றதனான் "செய்தவழி யெய்தும் நன்மையும்",

(ஈ) "அதனை மறத்தலினூஉங்கில்லை கேடு" என்றதனான், செய்யா வழிப்படுங் குற்றமும்,

(உ) "ஒல்லும் வகையான்" என்றதனான் "தத்தமக்கு இயலுந் திறங்களாகிய நிலை, அளவு, கருவி முதலாயின அறிந்து செய்தலும்,

(ஊ) ''செல்லும் வாயெல்லாஞ் செயல்'' என்றதனுன் செய்திறமும்.

(எ) ''மனத்துக்கண் மாசிலனுதல்'' என்றதனுன் செய்வானது இயல்பும்,

(ஏ) ''அழுக்காறவா............ இயன்றதறம்'' என்ற தனுன் வினையதியல்பும்

(ஐ) ''அன்றறிவா மென்னுது.........துணை'' என்ற தனுன் வினையது நன்மையும்,

(ஒ) '' அறித்தாறிது வெனவேண்டா '' என்றதனுன் அளவைகளானும் உவமைமுகத்தானும் பொருட்டிறங்கள துண்மையைப் புகலுமாறும்,

(ஓ) செயற்பாலதோரும் ... ... பழி '' என்றதனுனே. ஒன்றனைக் கடிதற்பாடும் செய்தற்பாடும் பொதுவகையான் கூறலும்,

(ஔ) ''வீழ்நாள் படாமை.........கல்'' என்றதனுன் செய்தற் பாலதனைச் சிறப்பு வகையான் வலியுறுத்தலும், பிற வும் கொள்ளக் கிடக்கும். பிறவுமன்ன.

இவைபற்றி, ஓரதிகாரத்துக்கண் நுவலும் பொருளை அதனதுண்மை கூறலும், அகற்கு இலக்கணங் கூறலும், செய் வான தியல்பும், வினையதியல்பும் செய்யுந் திறமும் செப்பலும், செய்த வழியுண்டாம் நன்மையும், செய்யா வழிப்படுங் குற்ற மும், ஒன்றனைக்கடிதற்பாடும் செய்தற்பாடும் பொதுவகையானும் சிறப்பு வகையானுங் கூறுதலும், இம்மைப் பயன் மறுமைப் பயன், இருமைப் பயன்களை வெவ்வேருகக் காட்டுதலும், தொகுத்து மொழிதலும். அன்ன பிறவுமாகப் பாகுபடுத்துக் கூறும் திறமெல்லாம் தெரித்துணர்த்தினராவர். இவற்றுள் சில வற்றிற்கு மேற்கோள் காட்டுதும் :

1. பொருளினது உண்மையை யுணர்த்துதல்.

தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பங் கண்டுழி, அன்புடையார் கண்பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்நின்ற அன்பினை யெல்லாரும் அறியத் தூற்று மாதலான், அன்பிற்கும் பிறரறியாமல் அடைத்து வைக்கும் தாழுளதோ? என்று வினவுதல் வகையான் அன்பினது உண்மையை யுணர்த்தி னர் :

'' அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல்தரும் : (8 : அன்புடைமை : 1)

பாட்டு அரங்கம்.

— கடலூர் ப. முத்துச்சாமி, கரந்தை.

தமிழர் கடன் :

வெள்ளத்தை அணைகட்டித் தேக்கல் வேண்டும்;
வெம்பகையை வன்மறத்தால் தாக்கல் வேண்டும்;
பள்ளத்தை மண்மூடி நிரப்பல் வேண்டும்,
பைந்தமிழால் அறியாமை அகற்றல் வேண்டும்;
கள்ளத்தை உள்ளொளியால் நீக்கல் வேண்டும்;
கடுங்குற்றம் புரிவாரை ஒறுத்தல் வேண்டும்;
உள்ளத்தே மொழிகாக்கும் உணர்ச்சி வேண்டும்;
ஒண்டமிழே நாடாளும் நிலைமை வேண்டும்!

ஆண்மைக்கோ அறிவுண்டால்; ஆற்றலுண்டால்;
அழகுண்டு; திருவுண்டே; அடக்கமுண்டால்!
பெண்மைக்கு மனையோம்பும் கடமை யுண்டு;
பேறுண்டு; சீருண்டு; கற்பு முண்டால்.
உண்மைக்கோ உயர்வுண்டு புகழு முண்டே!
உழைப்புக்குச் சிறப்புண்டு; வாகை யுண்டு
கண்ணுக்கோ ஒளியுண்டு; தமிழைக் காக்கும்
கடனுண்டு மெய்த் தமிழர்க் கியற்கையன்றே!

(முன் பக்கத்தொடர்ச்சி)

எழுத்துகளெல்லாம் அகரமாகிய முதலையுடையன: அது போல வுலகு 'ஆதிபகவனு''கிய முதலையுடைத்து என்று உலகின் மேல்வைத்து முதற் கடவுள துண்மை கூறுவார்

''அகர முதல வெழுத்தல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு''

என்றார்.

வினை; அறக்கடவுள்; ஊழ்; நிரயம் முதலாயின வுண்மைக்கும் காரணங்கள் காட்டும் பகுதிகள் உள. அவற்றை யிடம் பெற்றுழி யியம்புதும்.

''சிவிகை பொறுத்தானே டூர்ந்தானிடை'' என்றதுவே கருவியாகக்கொண்டு பொருளினவாம் உண்மைகளை யுய்த் துணர வைக்கு மிடங்களெல்லா மறியப்படும். அன்றியும், உவமை முகத்தான் உரைப்பனவுங் கொள்ளப்படும்.

(தொடரும்)

"தமிழர் கிளம்பினர்" போடி - கலைக்கோட்டி.

கொங்கலர் மலர்கள் குலவும் பொழிலும்
பொங்கிய தானை பொலிந்த நாடும்
முன்னுற வைத்து முனைந்து மேலாய்
மன்னுயிர் புரந்த மாண்புடைத் தமிழே!
மாயிரு ஞாலம் மன்னு நின்ற
பாயிருள் போக்கும் பரிதியே யன்னாய்!
தம்மை வியந்து தருக்கும் மாந்தர்
இன்றுன் புகழை இயம்பிட எண்ணார்;
கீழ்மை நச்சும் கீழோர் கூடித்
தாழ்த்தினர் "தகாது தனித்தமிழ்" என்றனர்.
ஒளிபட வாழ்ந்த உயர்தமிழ்த் தாயே!
களிறெனத் தமிழர் கிளம்பினர், கேளாய்
முற்றப் பகலும் முயன்று நின்றே
உற்ற பகையினை ஒழித்து வெல்வோம்;
அறத்தில் நீடி. அளவில் கலைகள்
சிறப்பாய் உன்னுள் செழிக்க வைப்போம்;
கொன்றிடும் கூற்றாய்க் கொடியர் சூழினும்
நின்னுனைக் காப்பதே நெறியெனக் கண்டோம்
'தென் மொழி' தெவிட்டா நறுந்தேன்
என்றுனை உலகில் ஏற்றிவைப் போமே!

அஞ்சுவார் அகல்க! அலைமணற்குழவி. தரங்கம் பாடி.

ஒன்றிவரும் ஞாலத்தை ஒட்டா(து) உறவாடிக்
கொன்றிடும் பொல்லாக் குலப்பேயும், – ஒன்றும்
இறையைத் தனக்கே இசைந்தவனாய் ஒவ்வா
மறையோதி, ஊழென்று கூறிச் சிறைகொள்ளும்
கூற்றென்(று) ஒருபால் குழப்பும் சமயத்தீ
நாற்றமும், முன்னோர் நவின்றதெனச் - சாற்றிப்
பொருட்கூற ஒண்ணாப் புழுதிமே டான
இருண்மறை நூலும் தமிழர் – அருட்கண்
கடைநோக்(கு) உருவால்; கவின்குறள் சொல்லும்
தடையில் தமிழ்நெறி போற்று - முடைநாற்றப்
புன்மொழிப் பண்பும் புனைபொய் மரபுகளும்
தென்மொழிக் கொள்கைக்குத் தீங்காகும் - நன்மொழி
நற்றமிழால் ஆகாத தில்லையால், வேற்றுமொழி
பற்றி நினைத்தல் பகடியே – சற்றிதனை
நெஞ்சில் நிறுத்தி நுழைந்திடுக தென்மொழியுள்
அஞ்சுவார் செல்க அகன்று!

இளம்பரிதி : கடந்தை — எழிலன்.

கடலாடிக் கடலாடி வருவான் - நாளும்
காலையிலே கீழ்த்திசையில் எழுவான்
உடலாடிக் களைக்க வெயில் பொழிவான் – பகல்
உச்சியிலே உருக்கமிக எரிப்பான்.

இசை பாடிப் புள் அழைக்க எழுவான் - காலை
எழிலாக மலர்ந்திடவே ஒளிர்வான்
அசைந்தாடும் முகிலிடையில் மறைவான் – நல்
அந்தியிலே அழகுவண்ணம் குழைப்பான்.

வெண்பளிங்குப் பனி முத்தை விதைப்பான் – பின்
வெயிலாகி அதனுருவைச் சிதைப்பான்.
புண்ணாகிப் புழுங்கிடவே சினப்பான் – முகில்
புனலாகிப் பெய்திடவே கலப்பான்.

கடிமணம் பொறேன் நன்முல்லை – விரியூர்.

அணி மணி ஆடை அலங்கல் சார்த்தி
அணைந்தெனைத் தழீஇ அகமுக மலர
“ எம்மகட் குரியன் இவன் ’ எனத் தேர்ந்து
நும்முள் உவக்கும் எணைப்பயந் தீரே,
யானே, இல்லற ஏற்புடை யேனே !
வானேர்பு உயர்ந்த வேட்கையள்; எனினே,
எந்தமிழ் இந்தியால் இழிவுறக் கண்டுளம்,
நொந்தெழுந் தமிழர் செற்றுடன் றெதிர்ந்தும்,
தம்முயிர் மாய்த்தும் உணரா அரசின்
கொம்பொடி படாஅக் கொடுநிலை பொருது
மிடிபடு முளத்தில் கடிமணம் பொறேஎன்,
கொடுவல் லாட்சியர் கொடிசாய்த் திட்டுச்
செந்தமிழ்க் கொடியை வானுற உயர்த்திப்
பைந்தமிழ் இளையோர் படர்ந்த பின்றை
முந்துவான் ஒருவனை உள்ளுமென் நெஞ்சே
அந்தநன் ருளென் மணநாள்; அந்நாள்
விரையினும் விரையா தாயினும், உறுதி
பிறழ கில்லாப் பெற்றியேனே.

நெஞ்சின் புலம்பல். புலவர். தி. நா. அறிவுஒளி.

நெஞ்சம் உருகி நைகின்றேன் – நான்
நினைந்து நினைந்து வேகின்றேன்.

விஞ்சும் துயரால் புலம்புகின்றேன் – நெஞ்சம்
வெடிக்க இதனை விளம்புகின்றேன்.

உலகின் மக்கள் பொய்ம்மிகுந்தார்!
ஊறித் திளைத்தார் போலிமையில்!
பல பல கற்றும் மெய் துறந்தார்!
பயனில் தீமைக் குழிவிழுந்தார்!

நம்பிய கொள்கை பொய் யென்றால்
நம்பார்; திகைப்பார் மருண்டிடுவார்
வெம்பிய பழமைக் கடிபணிவார்
வெந்ததை வேகவைத் தோய்ந்தொழிவார்.

புதுமையை வேட்பது பழிதருமா?
புலமையை ஏற்பதால் இழிவுறுமா?
எதுமெய்யென் றோர்வதே அறிவாகும்
இன்னருட் காட்படல் நெறியாகும்.

அறிவு

தமிழரசன், இடைப்பாடி

அறிவே உயிரின் அருங்கருவி
அழிவுகள் அதனால் பொடிப் பொடியாம்!
அறிவில் கயமைச் சழக்கர்க்கே
அடங்கிப் பணிதல்தொழும் பேற்றல்!
அறிவின் குரல்தான் துணையிருந்தும்
அகன்று புலம்பின் விலங்கேற்போம்.
அறிவைப் பெறுதல் உயர்கொள்கை;
அதுவே நமது தலைச் செய்கை.

நேர்மை விறலும் தாழ்ந்த நிலை;
நேற்றைக் கசடை இனி மாற்றின்
சீர்மை, வளங்கள், திறம் வளரும்.
சிறையர், தொழும்பர் நாமல்லோம்.
பாரைப் பகைக்கும் பகையினரைப்
படிப்படி நிமிர்ந்து வதைத் தொழிக்க
நேர்மதி யுடையார் நினைவெடுப்பின்
நேர்வுறும் பயனே புவிக்குரிதாம்!

தமிழா விழித்திலையோ ?

சுரா. உளுந்தூர்ப்பேட்டை.

வந்தவ ரெல்லாம் வாழ்கின்றார் – இந்தி
வடமொழிப் பேயர் ஆள்கின்றார்.
நந்தமிழ் மக்கள் தாழ்கின்றார் – மொழி,
நாடெனு நிலையால் மாள்கின்றார்.

ஆண்ட தமிழன் மாண்டானு? - அவன்
அடிவேர் காய்ந்த மரமானுன!
பூண்டாய்ப் புழுவாய்ப் பிறந்தானு? - சீச்சீ,
பூந்தமிழ்த் தாய்க்கா மகனுவான்?

ஏனடா தமிழா, விழித்திலேயோ?
இன்னுமா உறக்கம் எழுந்திடுவாய்!
கூனல் வாழ்வை நிமிர்ப்பாயே! - தமிழ்க்
குலமகள் துன்பம் தவிர்ப்பாயே!

சாலைமரம்.

அரங்க. சீனிவாசன்.

என் உள விண்ணில்? எனக்கிளை யாகிய கைந் நீட்டி
மன்னிய வானம் அளந்து வளர்ந்திடும் மர ஈட்டம்
ஒன்னலர் மேல் அம ருக்கெழு மள்ளர்தம் அணி போல
இன்னிழல் தந்துயர் சாலை மருங்கினில் எழில் ஊட்டும்.

வாட்டிய வெய்யிலி லேநெடு நீள்தொலை வரு வோர்க்கு
நீட்டிய பூங்குடை யாம்என நீண்டு, நல் நிழல் ஈயும்;
காட்டிய பல்நிற வானக மீன்கொடு கவின் மாலை
சூட்டிய போல விளங்கிடு தூயபசு மலர் வேயும்.

மண்ணக மாமகள் மாரி அழைக்கும் மணிக்கையோ?
'தண்ணளி செய்! எரி யேல்!' என ஞாயிறுதனை வேண்டிக்
கண்எதிர் ஏந்தி நயப்பொடு காட்டும் மலர்ச் செண்டோ?
விண்ணக மாகிய பந்தல் விழாதுற நடு தூணோ?

வாடு பசிக்குண வாகவும் இன்கனி வகை நல்கும்;
காடுக ளில்திரி ஆடுகள் மாடுகள் களைதீர
நீடு பகற்கண் இருந்தசை போடவும் நிழல் ஆகும்;
பீடுயர் சாலை மரங்கள் தரும்பயன் பெரிதாமே!

கூடு தொடுத்ததி லேதுயில் கின்றன குரீஇ ஈட்டம்
பாடும் இசைக்குரு கிக்கரு மந்திகள் பலகாலும்
கோடு களில்கனி உண்டு களிப்பொடு குதிபோடும்!
ஆடு தடக்கிளை யூடு குதித்திடும் அணில்தாவி!

ஆலொடு புன்னை தொடும்; புளி அத்தியொ டுற வாடும்;
வேலொடு மாதழு வும்; தனி வேம்பர சொடு மேவும்;
மாலொடு கொன்றையை வாகை உரிஞ்சும்நல் அறி
வெல்லாம்
நூலொடு சென்றவர் யாரொடும் அன்புசெய் முறைபோலே.

வாழ நமக்குத விப்பயன் ஈந்திடும் ஆனுலும்,
பீழை மனத்தினர், பேதையர் நன்றிஇல் பெரு மூடர்
கூழை படுத்துவர்; கொள்ளியும் ஆக்குவர் குறைகாறும்
நிழல் கொடுத்துயர் வள்ளல் இலக்கணம் நிலை நாட்டும். *

புரட்சித் திறனாய்வு

— புலவர் தி. நா. அறிவுஒளி —

மொழி வளர்ச்சிக்கு இலக்கியங்களும், கலை நூல்களும், அறிவு நூல்களும் இன்றியமையாதன. இலக்கிய நூல்கள் மட்டுமே மொழியை ஓம்பிவிட வியலாது. திறனாய்வில் பலதுறை முறைகள் இருப்பது காலப்போக்கிற்கிசைந்தது என்பதைவிட, மொழிவளம் விரிவதற்கேற்ப வளர்ந்து விரிந்ததெனக் கொள்வதே அமையும். மக்கள் பல தகுதியினராய்ப் பலதிறனுடையராய் அமைந்துள்ளனர். அவரவர் நிலைக்குரிய வகையில் பலதிற நூலினங்கள் அமைவதியல்பே. சிறுவர்க்குரிய கதைகளும், மகளிர்க்குரிய நூல்களும், இளைஞர்க்குரிய இலக்கியங்களும், முதியோர்க்குரிய படைப்புகளும் தனித்தனித் தன்மையும், சுவையும், பயனும், பண்பும் சான்றமைவது இயல்பே. இவையனைத்தும் மொழியாக்கத்திற்கு வேண்டுபவைதாம். அது போன்றே பல தொழில்கள், பல வாழ்வு நிலைகளுக்கேற்ற நூற்படைப்புகள் வேண்டியுள்ளன. இக்கால நூல்கள் மக்கள் எண்ணவளர்ச்சி, வாழ்க்கை மலர்ச்சிக்கிசைய மலர்ந்து சிறப்பன. இம்மரபு பண்டைக்காலத்தில் இல்லாதிருக்கலாம். ஆயின் புதுமைக் காலப் புதுமை மரபிதுவென ஏற்பது அறிஞர்க்கியல்பே.

‘கதைகள் மட்டுமே இலக்கியம்’ என்ற கருத்து மிகப்பழங் காலப்போக்கு. இன்று இலக்கியம் என்ற சொல் மிக விரிந்த பொருளில் – பலதுறைகளைக் – கிளைகளை - அறிவு விழுதுகளை – அணைத்து விளங்கும் பல்பொருள் குறிக்கும் ஒரு சொல்லாகி விட்டது. எண்ண விரிவுக்கேற்ப எழுத்து வளர்ச்சி சிறப்பது போன்றே இலக்கியம் என்ற சொற்பொருட்குறியும் வளர்ந்திருக்கிறது “உணர்ச்சிக்கு விருந்தாவன உணர்விலக்கியம்” என்று சிறப்புப் பெயரால் குறியீடு செய்கிறோம். “அறிவுக்கு விருந்தாவன அறிவிலக்கியம்” என்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு துறைக்கும் அத்துறைப் பெயரோடு இலக்கியத்தை இணைத்து வளர்க்க முனைகிறோம்.

இலக்கியம் ஆலமரத்தைப் போன்றது. இளமைக்கு இனிக்கும் நூல்கள், நடைகள், கருத்துகள் ஒருவகை; முதுமைக்குச் சுவைபயக்கும் நூல், நடை, கருத்துகள் வேறுவகை. பல கொள்கையர், அடைவினர், பல்வகை வாழ்வினர், அறிவினர், பல்வேறு உணர்வினர், பண்பினராக எழுதுவோரும் உள்ளனர். அவ்வெழுத்தாளர்க் கேற்பவே அன்னார் படைப்புகளும் உருவாகும். வித்தொன்று நட்டால் விளைவொன்றுமோ? வேறுபட்ட ஆக்கங்கள் மொழியில் பல வண்ணப் படைப்புகளாகப் பொலியும். இவற்றுள் ஒவ்வொரு போக்கின

ரும் தம் கருத்துக்கேற்றதைப் போற்றிப் புகழ்வதும், பிறவற்றை இகழ்வதும் காண்கிறோம். உண்மை நெறியில் இலக்கிய மதிப்பீடு செய்வோர் மிகச்சிலரே யாவர்.

நாலடியார், திருக்குறள், பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள் இலக்கியங்களே என்பது முன்னைப் புலவோரின் முடிந்த கருத்தாம். இவற்றை இலக்கியமல்ல எனப் பகர்வோர் சிலர் உள்ளனர். ஆயின், அன்னோர் கூற்று, கூற்றினும் கொடிதே. அழகும், சுவையும், இலக்கிய உணர்வோட்டமும், உயிர்ப் பண்பும், கலை நலமும் கமழும் மேற்கூறிய அறநூல்களைக் கருத்திலக்கியம் எனப் போற்றுதல் வேண்டும். கருத்தை முழங்குவதே நல்லிலக்கியம் வெறும் பொழுது போக்கு நூல் பாட்டாலாகியதாயினும், உரை நடையாலியன்றதாயினும் இலக்கியமன்று. திறனாய்வு என்ற பெயரால் – முற்போக்கு என்ற பெயரால் - புரட்சிக் கருத்து என்ற பெயரால் – பொய்யும், முரண் கருத்தும், கெட்ட நோக்கத்தோடும் சூழ்ச்சியோடும் கூடிய போலியுரையும் கொட்டி இறைக்கப்படுகின்றன. தம் தீய நோக்கங்கள் செலவாணியாகாத நிலையில் கயவர்கள் கையாளும் இரண்டகச் சூழ்ச்சித் திட்டங்கள் போன்றனவே இப் புதுமைப் புரட்சிக் கயவர்தம் புதுமைக் கருத்தும், புரட்சித் திறனாய்வுமாகும்.

மொழித்திறனும், முதநூற்கல்வியும், இலக்கிய – இலக்கணப் புலமையும், தமிழ் மரபும் அறியாத எழுத்தாளர்கள் மட்டுமே இவ்வாறு பிதற்றுகின்றனர் என்பதை நாம் கூர்மையாக உணர வேண்டும்.

இப்புரட்சியாளரில் பலர் வடமொழியடிமைகள் என்பதை அறியவேண்டும்; வேறுசிலர் ஆங்கில அடிமைகள்; சிலர் அடிவருடிகள் ஆவர். இப்பொழுது இவர்களின் உண்மையுருவம் தெரிந்துவிட்டது. எப்படியாவது பொதுமக்களிடையில் பழந்தமிழிலக்கியம், இலக்கணங்கள் தமிழ் மரபு, தமிழ்ப் பண்பு பற்றிய கெட்ட கருத்தை, வெறுப்பை உண்டாக்கி வளர்த்து விட வேண்டுமென்பதே இப்புரட்சியாளர் தம் உண்மை உள் நோக்கமாகும். இதைத் தவிர 'உண்மைத் திறனாய்வு' உள்ளமோ, அறிவோ, ஆற்றலோ இவர்கள்பாலில்லை

'தமிழில் அன்றும் இன்றும் ஒன்றுமில்லை' என்று வாய் கூசாமல் கூக்குரலிடவும் பின்வாங்காத இவர்தம் பேதைமையை என்னென்போம்! சிலர், ''பண்டைப் பெருமை இருக்கட்டும்; இன்று தமிழிலக்கியம் வளர்ந்ததா ? இல்லையே! என்று புதுத் தமிழ் வளர்ச்சிக்குப் புதை குழி தோண்டுகிறார்கள். இத்தனையும் எத்தனைக் கொடிய இரண்டகச் சூழ்ச்சி என்பதைத் தமிழ

ரும், தமிழ் எழுத்தாளர்களும் இன்னம் தெள்ளத் தெளிவாக அறியவில்லை. இதுதான் மிகவும் இரக்கப்படத்தக்க நிலை !! தம் குலத்தைச் சார்ந்தோர் எழுதுவதே எழுத்து; அதுவே அருமையான தேன் இலக்கியம் என்று கூறும் இத்திறனாய்வு மன்னர்களின் நேர்மையை அந்த அறந்தான் காக்கவேண்டும். பார்ப்பனக் குடும்பக் கதைகள், பார்ப்பனக் கொச்சைப் பேச்சு நடை எழுத்துகள் மட்டும் 'இலக்கியம்' எனக் கதைப்போரும், அதற்குக் கைகட்டி 'ஆமாம்' தாளம் போடுவோரும், இவர்களின் எச்சிலுக்கு இளிக்கும் அடிவருடிகளும் திறனாய்வாளர்களா? திருடர்களா ?

உண்மையைச் சொல்வதானால் குறித்த குலத்தினர் எழுதுவதையே வெளியிடும் இதழ்களும், பதிப்பகங்களும் உள்ளவரை உண்மையான இலக்கிய வளர்ச்சியோ, இலக்கிய மதிப்பீடோ, இலக்கியத் திறனாய்வோ செவ்வையாய் உருவாகவே ஆகாது. அந்நிலை நீடிக்கும் வரையில் இலக்கிய வளமும் நன்முறையில் அமையாது. நல்ல தகுதியும் - திறமையும் உடைய இலக்கியப் படைப்பாளர்களைப் பாராட்டும் மனம் தமிழர்க்கு நுட்பமாக அமையாதவரை, நல்லாக்கம் விளைவதிலும் தேக்கமிருக்கத்தானே செய்யும். தமிழ் வளர்கிறதே இதனைக் கெடுக்க வேண்டுமே! என்ற கெட்ட எண்ணக்காரர் தம் கெடு முயற்சியும், கொடுஞ்செயலும் தமிழ் இலக்கிய ஆக்கத்துக்கும், மொழி வளர்ச்சிக்கும் அளப்பருந் தடைகளாக அமைந்துள்ளன. உண்மைத் தமிழன்பு அற்ற தமிழ் எழுத்தாளர் சிலர் கயமையை மறைத்துக்கொண்டு 'பச்சை உண்மையைப்' பறைசாற்றுவதாகக் கூறித் தமிழைப் பழிப்பதும் இழிப்பதுமே தொழிலாகக் கொண்டுள்ளனர். இக்கயவர் முயற்சி விழலுக்கிறைத்த நீரே. ஆயினும் சலசலப்புக்கஞ்சும் இளையர்கள் தெளிவு பெறுதற்காகச் சில விளக்கங்களை நல்குவதை நம் கடமையாகக் கருதுகிறோம்:

1. பண்டை இலக்கியங்களைத் தாக்குவதோ, பழிப்பதோ, தாழ்த்துவதோ புத்திலக்கிய ஆக்கத்திற்கு உதவாது. பண்டை இலக்கியங்களை ஐயந்திரிபற ஆழ்ந்து ஆராய்ந்து சுவைத்து உணர்ந்து தெளிந்தால்தான் புத்திலக்கியங்களை நல்ல முறையில் ஆக்க வியலும்.

2. மொழியின் கண்ணோட்டத்தில் காலப்பகுப்புச் செய்து நூல்களைப் போற்றுவதோ, தூற்றுவதோ ஆய்வுமுறைக்கேற்றதன்று. பழங்கால நூல் என்பதால், இன்று அதன் சுவையை, பயனைத் துய்க்காமலிருக்க இயலாது. புதுமை என்பதற்காகவே தற்காலப் படைப்பைப் போற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்ற கட்டாயமுமில்லை. பண்டைய நூற்களின்

தனிச் சிறப்பு அவை காலங்கடந்தும் சுவை குன்ருமல், வெற்றி வாழ்வுடையனவாயிருக்கும் இயல்பாகும். பத்தாண்டுகளுக்கு முன்னெழுதிய பாடல்கள், கதைகள் நாடகங்கள் இன்று படிப்பாரற்று, கருதுவாரற்று ஒளியிழந்து உயிரற்றுப் போய்விட்டிருக்கக் காண்கிரேம். இதிலிருந்து இக்கால எழுத்தாளரின் புரட்சிப் படைப்புகள் குறைவாழ்வினவாகச் சீரழிவதைத் தெரிந்து கொள்ளலாம். காரணம், இவ்வெழுத்தாளர்தம் மொழி வளமின்மையும். அழகிய கற்பனையின்மையும், தெளிந்த திட்ட வட்டக் கருத்து வளமின்மையுமே என்பதையறிய வேண்டும்.

3. இலக்கியத்துக்கு உயரிய மொழியமைப்பு வேண்டும் அதில் எளிமை குழைவு, இனிமை, அழகு, ஓசை நயம், ஒழுங்கு, பண்பு, மரபு சிதைக்காத முறைமை, வெல்லுஞ்சொல்லாட்சி அமைந்திருக்க வேண்டும் கொச்சையும் பச்சையுமான பிழையான நடை சீரிய இலக்கியத்தினை உருவாக்காது. பேச்சு நடைப்படியே இலக்கியம் அமைய வேண்டுமென்ற கொள்கை பிழையானது; முறையற்றது. (ஒருவன் பிறந்த கோலத்தோடே என்றும் இருக்க வேண்டும் என்பது முறையான வேண்டுதலா? உடை, உடலுக்கு அணிவது எவ்வளவு இன்றியமையாததோ, அந்த அளவுக்கும் மேலாக இலக்கண ஒழுங்கும், பிழையற்ற நேரிய கூரிய சீரிய நடையமைப்பும், நல்ல மொழி நலனும் இலக்கியத்திற்கு நனி இன்றியமையாதவாம்.)

4. உணர்ச்சி மிக்க எழுத்து இலக்கியம் என்று கூறப்படுகிறது. உணர்ச்சி மிக்கதெல்லாம் இலக்கியமாகிவிடாது. நல்லுணர்ச்சி முறைப்படி அமைந்த பயனுள்ள — நோக்கமுள்ள படைப்பே இலக்கியமாகும். ஆழ்ந்த உள்ளுணர்ச்சியை நம்முள்ளத்தின் ஆழத்தில் விதைத்து, நிலையான 'உணர்வு நினைவுப்பதிவினை' உண்டாக்கும் பாட்டு, உரை, நாடகம் கதையே இலக்கியங்களாகும் அப்பொழுதைக்குத் திடீரென உணர்ச்சியைத் தூண்டிவிட்டுப் பின் மங்கிவிடும்படி அமையும் எழுத்து இலக்கியமன்று. எனவே உணர்வினில் வல்ல புலவோர் நிலைத்த உணர்வுகளை வடித்தெழுதி யுருவாக்குவதே இலக்கியமென உணரவேண்டும். படிக்கும்பொழுது துள்ளும் ஓசையோடும், பட்டுத் துண்டித்தாற்போன்ற நடையோடும், எதுகை மோனைக் குவியலாக அமைவதும் சீரிய எழுத்தாகிவிடாது. பொருட் சிறப்பும், கருத்தாழமும், உணர்வுருக்கமும், கலையழகும், சுவையும், மெய்ப்பாடும் கனிந்து வாழ்வுக்குப் பயன்படுவதாய், உள்ளத்தை ஓம்பி வளர்ப்பதாய் அமைந்ததே மெய்யிலக்கியமாம்.

5 குறித்த எல்லைக்குள் அடக்க முடிவதோ, குறித்த வட்டாரத்தில் உருவாக்கப்படுவதோ மட்டுமே இலக்கியமாகும்

எனப் பிழையான இலக்கணத்தை வகுத்துக்கொண்டு திறனாய்வது, இலக்கிய ஊற்றை யடைக்கும் பெருங்கல்லாகும். 'குத்து மதிப்பீடு' செய்யும் திறனாய்வு, இலக்கிய, கலைத்துறைக்கு ஏற்றதன்று. குத்தூசியால் மூட்டையிலிருக்கும் கூலத்தை இழுத்துப் பார்த்து மதிப்பிடுவதைப் போன்றதன்று இலக்கியத் திறனாய்வு. பிற மொழிவளத்தில் நெஞ்சைப் பறிகொடுத்தவர்களால், தமிழ் வளத்தினை நேர்மையோடு அளக்க முடியவே முடியாது. பிற மொழித் திறனாய்விலக்கணத்தை ஓதியுணர்ந்து, தமிழிலக்கியத்தை ஆராய்வது முழு முதல் பிழையாகும். தமிழிலக்கணம், தமிழ் மரபு வழியிலே தமிழிலக்கியத்தை அளக்க வேண்டும். பிறமொழித் திறனாய்விலக்கணத்தை நாம் மொழி பெயர்த்து ஆராயப் பயன் படுத்தலாம். அதற்கேற்பவே நம் பண்டை நூல்களும், தற்காலப் படைப்புகளும் இருக்கவேண்டுமென எதிர்பார்ப்பது தவறு; அது முறையுமன்று.

6. இலக்கிய வடிவம், உருவம் என்பதற்கே முதன்மை வழங்கிக் கருத்தை, எண்ணத்தைப் புறக்கணிக்கும் சுவையுள்ளம் மொழியாக்கத்துக்கு ஊறு பயக்கும். பெருங்கதை அகவற் பாவால் அமைந்ததும், சிந்தாமணி மண்டிலங்களில் அமைந்ததும், நளவெண்பா நேரிசை வெண்பாவால் அமைந்ததும் புலவர்தம் விருப்பத்தையும் காலவியற்கையையும் பொறுத்ததே. சிந்தாமணி ஏன் வெண்பாவில் அமையவில்லை? என்றோ பெருங்கதை மண்டிலத்தால் உருவாகியிருந்தால் நன்றாக இருக்குமென்றோ கூறுவது திறனாய்வன்று. உள்ளதையே ஆராயவேண்டும்; இல்லாததைக் கூறி ஏங்குவது ஆய்வுமுறையன்று. இக்காலப் படைப்புகளுக்கும் இதுபோலக் கருத்துரைப்போர் உள்ளனர். இவர்கள் இலக்கிய உணர்வு குன்றியவர்கள் என்பதைத் தவிர வேறென்ன கூறவியலும்?

7. இலக்கியம் என மதிப்பீடு செய்யச் சமயக் கருத்துச் சிலகாலத்தில் முதன்மையாகக் கொள்ளப்பட்டது. அரசு - அரசர் பற்றிய செய்திகள் முதன்மையாக ஏற்கப்பட்டன; நாடு-விடுதலைப்போர்; சீர்திருத்தம்; மன்பதைக் குறைபாடுகளை எதிர்த்தல் ஆகிய செய்திகள் அண்மையில் சிறப்பாக அமைந்தன; குடும்பம் - உணர்வுகள் - அறிவியல் போன்றவை சிலரால் போற்றப்பட்ட கருப்பொருளாக அமைந்தன. ஆயின், இவை ஒவ்வொன்றும் சிலகாலம் செல்வாக்கோடிருந்து பின் செல்வாக்கிழந்து வீழ்ந்தமையை இலக்கிய வரலாறு காட்டுகிறது. அதுபோல நேற்றும் இன்றும் முதன்மையாகக் கருதப்படும் செய்திகள், கருப்பொருள்கள், கருத்துகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, வேறு புதுமை நோக்குகளும் கொள்கைகளும் நிகழ்ச்சிகளும், உணர்ச்சி மாற்றங்களும், இடம் – பொருள் –

சூழ்நிலையின் முன்னேற்ற – பின்னேற்றங்களும்; அறிவியல் வளர்ச்சியும் இலக்கியப் போக்கைத் தாக்கி ஆட்சி புரிகின்றன. இம்மாற்றங்களுக்கேற்பப் போற்றுவோரும், குறைகூறுவோரும் அமைவர். திறனாய்வு இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தி, மக்களின் சுவையுணர்வைப் பண்படுத்த வேண்டும்.

8. தமிழுணர்ச்சியும், தமிழ்ப் பண்பும் ஊட்டும் எழுத்தைச் சாடும் தமிழ்(!) எழுத்தாளர்கள் சிலர் வாழ்கின்றனர்(!) மக்கள் வாழ்வில் குறைகள் இருப்பதியல்பே. அதனால் ஒழுக்கம், அறம், கற்பு, பண்பு, சான்றாண்மை என்பவையே வேண்டா என்பது ஆய்வறிவுடையோர் கருத்தாகுமா ? திருடக்கூடாது, கொலை செய்யக்கூடாது எனச் சட்டமிருந்தும் கள்வரும் கொலைஞரும் தோன்றத்தானே செய்கிறார்கள். அதனால் சட்டமே வேண்டாம்; அறமன்றமே வேண்டாம் என்கிறோமா ! தமிழ்ப் பண்பைத், தமிழறத்தை மீறுவோர் உள்ளனர் என்பதற்காகத் தமிழ்ப் பண்பையும், தமிழறத்தையும், திருக்குறளையும், தமிழ்ப் புலவோரையும் சாடுவது என்ன அறமோ; என்ன திறனாய்வோ; என்ன நேர்மையோ; புலப்படவில்லை! தமக்குக் கைவராத நல் வியல்பு உலகினர்க்கே வேண்டா என்பது இவர்தம் உட் கருத்தோ ? இளமையினர் உள்ளத்தில் இத்தகையோரின் அறிவில்லா எழுத்து தீமைக் களையினை ஊட்டி வளர்க்குமன்றோ! மன்பதைக்கு எத்தனைக் கொடுமை செய்கின்றனர் இவர்கள்!

9. எதையாவது (உண்மையில்லாமல்) கடுமையாகத் தாக்கி எழுதினால்தான் தம்பெயரும், எழுத்தும் சிறப்பாக விளங்கும் என்ற நோக்கோடுதான் புரட்சித் திறனாய்வாளர்கள் (?) ‘ஏறுமாறாக’ ஏதேதோ பேசி, எழுதி வருகின்றனர். ஐரோப்பாவில் கலை இலக்கிய மறுமலர்ச்சியைப்பற்றிப் படித்து. அதைத் தவறாக உணர்ந்துகொண்ட பிழை பட்ட போக்கு இதுவாகும்.

தனித்தமிழ்க் கொள்கையையும் தனித்தமிழ் எழுத்தாக்கங்களையும் தாக்குவது ஒரு புரட்சி என இத்தகையார் எண்ணுகின்றனர். தனித்தமிழ்க் கொள்கையின் வெற்றி அத்தமிழறியாதாரை அச்சுறுத்தி மருட்டிவிட்டிருக்கின்றது. தம் எழுத்துகள் சிறப்பிழக்குமோ என்ற அச்சத்தால் கொள்கையையும். அதன் தொண்டர்களையும் தமிழ்ப் பகைவர் தாக்குகின்றனர். நடையும், ஆக்கமும் எழுதுவோரின் அறிவாற்றலைப் பொறுத்தது. இது குறித்து இம் முற்போக்காளர்கள் ஏன் கதற வேண்டும் ? தனித்தமிழ் இலக்கிய வளந்தான் வருங்காலத்தில் ஒளி வீசிச் சிறக்கும் என்பதை நாம் கூறவேண்டுவதில்லை. காலமே கூறும். அக்காலப் பெருஞ்சுழலில் பொய்ப் புரட்சி வீழும்; உண்மைப் புரட்சி ஓங்கும்.

—●—

எச்சரிக்கின்றோம் !

வேலூரினின்று வெளிவரும் 'கவிஞன்' எனும் தாளிகையின் பத்தாம் (நவம்பர்) இதழில் வானம்பாடி என்பார் எழுதியதாக வெளியான ஒரு பாடலைக் காண நேர்ந்தது. அப்பாடல் வானம்பாடி எழுதியதன்று. துரைமாணிக்கம் அவர்களால் எழுதப் பெற்று. முன்னைய தென்மொழி 10 ஆம் இசையில் 'கல்வியொழுங்கு' என்ற தலைப்புடன் வெளிவந்ததாகும். இதுபற்றிக் 'கவிஞன்' ஆசிரியரைக் கேட்டதில், உண்மையறியாது பாடலை வெளியிட்டு விட்டதாகவும், பிழைக்கு வருந்துவதாகவும், அடுத்த இதழில் நிலையை விளக்கிவிடுவதாகவும் கூறியுள்ளார். பிறர் எழுத்தினைத் திருடிப் புகழ்பெறும் போலியரும் புல்லியரும் இன்றைத் தமிழகத்தில் மலிந்து கிடப்பதை நாம் அறியினும் இதுபோல் எழுத்துக் கெழுத்து அப்படியே திருடிப் பிழைக்கும் தீயரும் இருப்பர் என்பது நம்மால் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. வானம்பாடி எனப் பெயர் புனைந்த அப்புல்லியோன் 'பெருஞ்சித்திரன்' 'கல்லாடன்' என்பாருந் தானே என்றும் பல இடங்களில் பொய் கூறித் திரிந்ததாகவும் அறிகின்றோம்! என்ன ஏமாற்று! இப்புல்லியனுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க நம் உள்ளம் சீறி எழுந்தாலும், அவ்வாறு செய்ய முடியாதவாறு அன்னோன் தற்கொலை புரிந்து மாண்டு பட்டனன் என்று கேள்வியுறுகின்றோம். ஆயினும், உண்மைப் புலவர் அமைதியாக ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருத்தலைப் பயன்படுத்தி அவர்தம் படைப்புகளைத் திருடும் போலிகள் இனியும் ஆங்காங்குத் தலை காட்டுதல் கூடும். அன்னாரைத் தென்மொழி எளிதில் விடாது என எச்சரிக்கின்றோம். தென்மொழியன்பர்கள் அவ்விழிதகையாளரைக் காண நேரின் சற்றும் தயங்காமல் சொல்லறையால் மட்டுமன்று, மல்லறையாலும் அவர்கட்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டுகின்றோம்.

(உ—ர்)

தமிழன்பர்க்கொரு நல் வாய்ப்பு !

தமிழறிவுக்கு அடிப்படையானவும் வேண்டப்படுவனவுமாகிய 'வரலாறு' 'இலக்கணம்' 'மொழி நூல்' ஆகிய முத்துறைகளிலும் மொழி யறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் எழுதும், வாழ்நாளெல்லாம் வைத்துப் போற்றத் தக்க அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இனித் தென்மொழியில் தொடர்ந்து இடம் பெறும் என மகிழ்வுடன் அறிவித்துக் கொள்கின்றோம்!

(உ—ர்)

மாந்துறைப் பட்டி மன்றத் தலைவர் தீர்ப்பு.

சென்ற மேழ மாதம் உகூ-ஆம் பக்கல் (11—5—65) செவ்வாய் மாலை, மாந்துறையில் நடைபெற்ற பட்டி மன்றத்திற்குத் தலைமை தாங்கிய யான், ஒரு பக்கமும் சாராது நடு நிலையாகவே பண்டை முறைப்படி அறிவு நெறியே சிறந்ததென்று தீர்ப்புக் கூறினேன். அன்பு கலந்த அறிவென்பதே என் கருத்து. ஆயின், அதை விளக்கிக் கூற அன்று நேரமில்லை.

> " அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர் " (குறள். 430)

என்ற திருவள்ளுவரே,

> " அறிவினுன் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
> தன் நோய்போற் போற்றுக் கடை." (குறள். 315)

என அதை வரையறுத்துள்ளார். இவ்வரையறையையே 'பண்டை முறைப்படி' என்னும் தொடராற் குறித்தேன். அதைக் கவனியாத வலங்கையர், அவையார் தீர்ப்பிற்கு நேர் மாறாக நான் கூறினேனென்று கருதிக்கொண்டதாகத் தெரிகின்றது. அது தவறாகும்.

> " அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாம்
> சிறுவன் பகையாம் செறிந்த - அறிவுடைய
> வென்றி வனசரன்தான் வேதியனைக் காத்தான் முன்
> கொன்றதொரு வேந்தைக் குரங்கு."

என்னும் நீதிவெண்பாவின (3) பொருளை நோக்கி உண்மை தெளிக.

— ஞா. தேவநேயன்.

பிழை — திருத்தம்

சென்றவிதழில் (சுவடி 3. ஓலை 10) வெளி வந்துள்ள பாவாணர் கட்டுரையில் 14 ஆம் பக்கம் 23 ஆம் வரியில் 'இமாம் -தொழுவிப்பாளர்' என்றிருப்பதை 'இமாம் - தொழ வாசான்' என்று திருத்திக்கொள்ள வேண்டுகின்றேம்.

(உ — ர்)

முகவர்கள் கவனத்திற்கு :

- ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்.
- படிகள் சரி பார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
- தேவையான மிகுதிப் படிகட்கு முன் கூட்டியே எழுதவும்.

— அமைச்சர்.

நம் திரைப்படங்களும் இயற்கையும் !

— செல்வதுரை பி, எசி. (திரைப்படக் கலைத்துறை)

"கற்பனை இருவகைப்படும்; அவை உண்மைக் கற்பனை, வெறுங்கற்பனை என்பன. உள்ளதையே சிறப்பித்து உயர்வு நவிற்சியும் அளவாகக் கூட்டிக் கூறுவது உண்மைக் கற்பனை. இல்லதைப் புனைந்து உயர்வு நவிற்சி வரம்பு கடந்து சேர்த்துக் கூறுவது வெறுங்கற்பனை. 'மலரும் முல்லையும், ஒலிக்கும் ஆயன் குழலும் மாலைக்காலம் இஃது என்று உணர்த்தாவிட்டால் வருந்தமாட்டேனே' என்று காதலி நெக்குருகி வருந்துவதாகக் கூறுவது சுவைகுறைந்த உண்மைக் கற்பனை. திங்களின் தண்ணிலவைப்பார்த்து 'வெயிலாய் எரிகிறதே' என்றும், ஆரக் குழம்பைப் பூசும் தோழியரை நோக்கிச் 'செந்தழலைப் பூசுவது என்னோ!' என்றும் காதலி கதறுவதாகக் கூறுவது சுவை மிக்க வெறுங்கற்பனை.

கலையுலகால் பயன் காண விரும்புவோர் உண்மைக் கற்பனையையும், வெறுங் கற்பனையையும் பகுத்துணர்ந்து, உண்மைக் கற்பனை சுவை குறைந்ததாயினும், அதையே போற்றி உணரல் வேண்டும். இன்றேல் கலை பண்பாட்டுக்கு உரிய சிறந்த கருவி ஆகாமல், பொழுது போக்கிற்கு மட்டும் உரிய இழிந்த கள் ஆகும்."

கலையில் கற்பனையின் பங்கு என்ன என்பதைப் பற்றிக் கூறவந்த பர் மு. வரதராசனார் அவர்கள் தமது 'ஓவச் செய்தி' யில் கூறிய கூற்றாகும். இது கலை என்பது வாழ்க்கையின் நிழலன்றி வேறில்லை. எத்துணை அளவு கலை வாழ்க்கையை ஒட்டி அமைகிறதோ, அத்துணை அளவு அது சிறப்புறும்; ஆனால் சுவை குன்றத்தான் செய்யும் கலைப் படைப்புகளைச் சுவைப்போர், பண்பட்ட உணர்ச்சி உடையோரெனில், உண்மைக் கற்பனையோடு படைக்கப்பட்ட கலை நன்கு சுவைக்கப்படும். அல்லாமல் சுவைப்போர் குழந்தைகளுக்கேயுரிய திருந்தாத உணர்ச்சியுடையோர் எனினும், அன்றித் திரிந்த உணர்ச்சியுடையோர் எனினும், வெறுங்கற்பனைப் படைப்புகளே சுவைக்கப்பெறும். ஒரு நாட்டில் மக்களால் விரும்பிச் சுவைக்கப் பெறும் கலைப் படைப்புகளைக் கண்டு, அந்நாட்டு மக்களின் உணர்ச்சியினைக் கணிக்க வியலும்.

இன்றைய கலைகளில் ஒன்றாக வைத்து எண்ணப்படும் திரைப்படம் ஓர் அரிய கருவியாகும். வானொலி, பொதுக்கூட்டங்கள், நாடகங்கள் ஆகியவற்றினை விட மிகுதியாக மக்களோடு தொடர்பு கொள்ளுவதற்குத் திரைப்படமே துணை செய்கின்றது. மேலும் மிகக் குறைந்த செலவில் கிட்டும் பொழுது

போக்குப் பொருள் என்ற அளவில் இது மக்களிடையே மிகவும் மதிப்புப் பெற்றிருக்கிறது. மக்கள் வாழ்வோடு இத்துணை அளவு தொடர்பு பெற்றிருக்கும் இத்திரைப் படக் கதையின் தரம் மிகவும் உயர்வாக அமைவது இன்றியமையாததாகும். ஏனெனில் உணர்ச்சியை ஊட்டவும், அழிக்கவும், மாறுபடுத்தவும் வல்லது இது.

திரைப் படத்தினை ஓர் உயர்ந்த கலையாக ஆக்குவதற்காக வாய்த்திருக்கும் வாய்ப்புகள் பல. மற்றக் கலைகளைவிடத் திரைப்படத்திற்கு விளக்கும் ஆற்றல் மிகுதி. இதற்கே உரிய ஒளிப்பதிவு, வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொழுதுகளில் எடுக்கப்பட்ட காட்சிகளை ஒன்றுகத் தொகுக்கும் 'தொகுப்பு' விரகு போன்றவை. இஃதை ஓர் உயர்ந்த கலையாக உருவாக்கத் துணைபுரிகின்றன. எனவே மற்றக் கலைகளைவிட 'வாழ்க்கையை' இயற்கையாக, அதாவது உண்மைக் கற்பனையோடு விளங்கவைக்கத் திரைப் படத்தினைப் பயன் படுத்த வியலும் கதைக் கருத்து (Theme), கதை அமைப்பு (Treatment), உறுப்பினர்களின் பண்பு நலன்கள், அவர்களின் நடை உடை பழக்கவழக்கங்கள், நிகழ்ச்சிகளின் சுற்றுப் புறங்கள், சூழ்நிலைகள் ஆகிய அனைத்துமே இயற்கையாக அமைந்திருக்கும் ஒரு திரைப்படத்தினை ஓர் அரிய கலைப் படைப்பு எனக்கூறலாம்.

ஒரு படத்தின் உருவாக்கத்திற்கு முழுப் பொறுப்பாளியாகப் படத்தின் இயக்குநரைக் கூறலாம். எனவே ஒரு படம் இயற்கையாக அமைய வேண்டுமெனில், அவ்வியக்குநருக்குத் திரைப்பட நுணுக்க அறிவு இன்றியமையாததாகும். திரைப் படத்திற்கு உரிய அரிய வாய்ப்புகள், நாடகம் போலன்றி எதனையும் 'காட்சிகள்' வாயிலாகவே உணர்த்தப் பெறும் தன்மை ஆகிய திரைப்படத்திற்கே உரிய சிறப்பியல்புகளை அறிந்து திரைப்பட இயக்குநர் செயலாற்றல் வேண்டும். மேலும் திரைப்பட நுணுக்கங்களில் மட்டுமன்றி, வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தேர்ச்சி இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு வழக்கறிஞரின் வாழ்க்கையை உருவாக்க எண்ணும் இயக்குநர், அவ்வழக்கறிஞரின் சூழ்நிலைகள், ஏந்துகள் வழக்காடும் தொழில் நுணுக்கங்கள் ஆகியவனைத்தும் அறிந்திருந்தாலே அவ்வாறு உருவாக்க இயலும்.

நமது படங்களில் 'இயற்கை' என்பதே மருந்துக்குக் கூட அகப்படாத தொன்ருகும். கதையில், உரையாடலில், பண்பு நலன்களில், நிகழ்ச்சிகளின் சூழ்நிலைகளில் 'இயற்கை' என்பது இம்மியும் கிடையாது. மேலும் நமது படங்கள் திரைப் படத்திற்கே உரிய சிறப்பியல்புகளைப் பெற்றிருக்காமல், மிகுதி

யான உரையாடல்களாலும், மிகைப்படுத்தப்பட்ட பண்பு நலன் களாலும் நாடகங்களாக இருக்கின்றனவே யொழியத் திரைப் படங்களாக இல்லை.

நமது படங்கள் கூறும் கதைகளை ஆராய்ந்தால், பெரும் பாலான கதைகள் காதல் கதைகளாகவே இருக்கின்றன. காதல் என்பது வாழ்க்கையில் பொதுவாகக் காணப்படினும், நம் படங்களில் காட்டுவது போன்று அவ்வளவு எளிதாகக் காணப்படுதல் இல்லை திடீர்க் காதல், தடையில்லாத அதன் வளர்ச்சி, எவ்வளவுதான் சிக்கல்கள் நேர்ந்தாலும் இறுதியில் அக்காதல் எவ்வாறேனும் நிறைவேறுதல் போன்றனவெல்லாம் நடைமுறைக்குச் சற்றும் பொருந்துவனவாக இல்லை. காதலில்லை யேல் உடன் பிறந்தார்மேல் கரிசனம் (பாசம்), அன்னை அன்பு, பிள்ளைப் பற்று, ஆகியவைதாம் கதைக் கருத்துகள். இவை யெல்லாமே மிகைப் படுத்தப்பட்டே கையாளப்படுகின்றன.

கதைக் கருத்து மிகைப்படுத்தப்படுவது போன்றே, பண்பு நலன்களும் மிகைப்படுத்தப்படுகின்றன. கதைத் தலைவனை அல் லது தலைவியை அல்லது சிறப்பான ஓர் உறுப்பினரைப் பண் பின் குன்றுகக் காட்டுவதும், வேறு ஒன்றிரண்டு உறுப்பினர் களை முழு அளவில் தீயவர்களாகக் காட்டுவதும் செயற்கை யாகத் திகழ்கின்றன. மாந்தர்கள் யாவருமே நல்ல பண்பு களும், தீயபண்புகளும் கலந்து உள்ளவர்களாகவே காணப்படு வர். நல்ல பண்புகளே முழு அளவில் நிறைந்திருப்பவர்களை யும், அன்றித் தீய பண்புகளே முழு அளவில் நிறைந்திருப்பவர் களையும் வாழ்க்கையில் காண்டல் மிகமிக அரிது எனவே பண்பு நலன்களை உருவாக்குகையில், உளவியல் அறிவோடு உருவாக்குவது இன்றியமையாததாகும்.

படத்தில் வரும் நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறவே வேண்டா. கடற்கரையிலும், பூங்காக்களிலும் காதலர்கள் தனி யாக ஆடுவது, பாடுவது, இறுதியில் ஓடுவது, வெட்ட வெளி களில் அல்லது வயற்புறங்களில் பற்பல மேனாட்டு இசைக்கருவி களைக் கையில் வைத்துக்கொண்டு கூட்டமாகச் சேர்ந்து கூத் தாடுவது, மேனாட்டு முறையில் அமைந்த விடுதிகளில் தமிழ்ப் பாட்டுகளைப் பாடிக்கொண்டு ஆட்டம் ஆடுவது போன்றவை எல்லாம் நம் தமிழ் நாட்டில் காணவே முடியாத காட்சிகள். ஆனால் இவை நம் தமிழ்ப் படங்கள் எல்லாவற்றிலும் வருகின் றன.

அடுத்தது, அரங்க அமைப்புகள், நடை, உடை பழக்க வழக்கங்கள். நடுத்தரக் குடும்பமேயானாலும், அக்குடும்பம் வாழும் வீடு மிகப் பெரிய அளவில் அமைக்கப்படுகின்றது.

பெரிய பெரிய அறைகள் அவற்றில் அழகான மெத்தைநாற்காலி கள், வல்லியம் (பியானோ) மேனாட்டு முறையில் சமையல் அறை, அழகான மிசைப்பலகை, நாற்காலிகளோடமைந்த சாப்பிடும் அறை ஆகியவற்றை மிகமிக வாகான குடும்பங்களில் தாம் காணமுடியுமே தவிர, நம் படங்களில் வருவதுபோல் யாவருடைய வீட்டிலும் காணவியலுமா? உடைகளைப் பொறுத்த வரையில், மிகுதியான உறுப்பினர்கள் முழுக்கால் சட்டையும், கைச்சட்டையும், மேற்குப்பாயமும் (COAT கழுத் துப் பட்டியும் உடையவர்களாக இருக்கின்றார்கள் முழுக்கால் சட்டை, குப்பாயம் காலிலே தோலுறை (BOOTS) ஆகியவற்றோடே படுக்கைக்குச் செல்கின்றனர். செம்படவப் பெண் மீன் விற்கப்போகையில் ஆவியந்துகில் (NYLON) சேலை யோடு, தலைவாரிப் பூ முடித்துச்செல்லுகிறாள். இவ்வகை நகைக் கத்தக்க தவறுகளெல்லாம் நம் படங்களில் ஏன் நிகழ்கின்றன?

நம் தமிழ்ப்பட இயக்குநர்கள் யாருக்குமே படத்தை இயற்கையாகப் படைக்கும் திறமை கிடையாது. மேலும் திரைப் படத்தைப் பற்றிய போதிய அறிவும் கிடையாது. வாழ்க்கை யில் ஓரிரு குறிப்பிட்ட துறைகளில் மட்டும், அதுவும் ஒரு மேலோட்டமான அறிவே அவர்களுக்கு உண்டு அதை வைத்துக்கொண்டு குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுபவர்கள் போல் 'ஒரு படத்தை இயக்க முடியும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அவர்களின் குறைவான அறிவுக்குக் கரணிய மாக, 'பொழுது போக்கு' என்பதன் மேல் பழி சுமத்துகின் றனர் பொழுது போக்கு என்ற பெயரில், மக்களின் உணர்ச்சி களை மட்டும் இவர்கள் மழுங்கடிக்கவில்லை; திரைப்படக் கலை யின் உயிரையே துணித்து விடுகின்றனர்.

தென்மொழி, கடலூர் !

தனித் தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ், ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளி நாடு
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

ஆட்டை நான்காம் பக்கம்	[இருவண்ணம்]	100 உருபா
,, ,,	[ஒரு வண்ணம்]	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற் பனையாளர்கள் எழுதிக் கேட்க.